**அரசு ஊழியர்**

டிசம்பர் 2018

மலர் : 39 இதழ் : 12

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*

## சூடா ஒரு கோப்பை சூப்

### போகப் போகப் புரியும்!

வறியவர்க்கு நான்
உதவினால்,
உணவளித்தால்
என்னைப்
“புனிதன்''
என்கிறார்கள்;

வறியவர்களுக்கு
உணவில்லாமல்
போனதேன் என்று
வினவினால்
என்னைப்
“புரட்சியாளன்''
என்கிறார்கள்!

நான் இனி யாராக
இருப்பேன் என்பதை
போகப்போக அவர்களே
புரிந்து கொள்வார்கள்!

- பிஷப் ஹெல்டர் கொமாரா

# உரிமைக்காக போராடுவோம்! மகத்தான வெற்றி பெறுவோம்!

மகத்தான ஜாக்டோ-ஜியோவின் காலவரையற்ற வேலை நிறுத்தம் 4.12.2018 முதல் துவங்கவுள்ளது. போராட்டம் இல்லாத வாழ்க்கை கிடையாது. ஏன் தொடர்ச்சியான போராட்டம்? அரசின் தவறான கொள்கை முடிவுகளும் நிர்வாக நடைமுறைகளும் தான் உழைக்கும் வர்க்கத்தை போராடத் தள்ளுகிறது.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் ஊதிய மாற்றம், வாழ்வாதார கோரிக்கைகளான ஓய்வூதியத்தை பாதுகாப்பது, கொத்தடிமை கூலி முறையை ஒழிப்பது, ஏழை எளிய மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவது, நியாயமான உரிமைகளை ஆட்சியாளர்கள் மறுக்கிறபோது போராட்டங்கள் மூலம்தான் வென்றெடுத்திருக்கிறோம்.

அந்த வகையில்தான் தமிழகத்தில் ஜாக்டோ-ஜியோவின் தொடர்ச்சியான போராட்டமும், நியாயமான ஊதிய மாற்றம் உட்பட பல கோரிக்கைகளை தமிழக அரசு தள்ளிப்போட நினைத்தபோது 2017ஆம் ஆண்டு செப்டம்பர் 7 முதல் தொடங்கிய வேலை நிறுத்தம்தான் பல தடைகளை தாண்டி மிகப்பெரிய வெற்றியைப் பெற்று, அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் ஊதிய மாற்றம் பெற்றது.

ஆனாலும், புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து, அரசு ஊழியர் ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகள், சிறப்பு காலமுறை ஊதியம் ரத்து செய்தல், மறுக்கப்பட்டுள்ள 21 மாத ஊதிய நிலுவை, இளைஞர்களின் வேலை வாய்ப்பை தட்டிப் பறிக்கும் அரசாணை எண். 56ஐ ரத்து செய்தல் ஆகிய உரிமைகள் அரசால் தீர்க்கப்படாமல் இருக்கிறது. இரண்டாண்டு காலமாக தொடர் போராட்டங்கள் நடத்தி அரசு நிறைவேற்றாத காரணத்தால்தான் வேறு வழியின்றி காலவரையற்ற வேலை நிறுத்தம். காலவரையற்ற வேலை நிறுத்தம்தான் அரசிடம் பேசும் மொழியாக உள்ளது.

ஒன்றுபட்ட கூட்டுபேர சக்தியின் தொடர் நெருக்கடியை உணர்ந்து தமிழக அரசு 30.11.2018

ஜாக்டோ-ஜியோவை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. கோரிக்கைகளை விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. ஆனால், தமிழக அரசு கோரிக்கைகளை நிறைவேற்ற எந்த உத்திரவாதமும் தரவில்லை. மாறாக, எப்பொழுதும்போல் நிதி இல்லை, கஜா புயல் காரணங்களை காட்டி, முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக தெரிவித்த நிலையில், உயர் மட்டக் குழு கூடி திட்டமிட்டபடி வேலை நிறுத்தத்தை நடத்துவது என்றும், வேலை நிறுத்தத்தின்போது தொடர் இயக்கங்களை நடத்துவது என்றும், கஜா புயல் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் நிவாரணப் பணிகளை தங்கு தடையின்றி மேற்கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

கோரிக்கைகளை நிறைவேற்ற குறைந்தபட்ச உத்திரவாதம் தராத தமிழக அரசு புதிய பென்சன் திட்டம் ரத்து உட்பட நமது கோரிக்கைகளை நிறைவேற்றித் தராது என உணர்ந்து வேலை நிறுத்தம்தான் தீர்வு என நாம் முடிவுக்கு வந்தோம்.

புயல் பாதிப்பை காரணம் சொல்லி தமிழக அரசு தப்பிக்க பார்க்கிறதை நாம் அனுமதிக்க முடியாது. கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில் புயலை காரணம் காட்டி நாமும் அமைதி காக்க முடியாது. புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைத்து கொண்டிருப்பவர்கள் நாம் என்பதை மக்கள் மறக்க மாட்டார்கள். ஒரு நாள் ஊதியம், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து நிவாரணப் பொருட்கள் என கோடிக்கணக்கில் வழங்கி வருகிறோம். எந்தவித நிவாரணப் பணியும் மேற்கொள்ளாத அரசு, மக்களைக் காட்டி நமது உரிமைகளை மறுக்கிற போக்கினை அனுமதிப்பதில் நியாயமில்லை.

அதனால்தான் வேலை நிறுத்தம் நடத்தும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். வேலை நிறுத்தம் நமது உரிமைகளை மீட்பதற்கு வேலை நிறுத்தத்தில் இருந்தாலும் புயல் நிவாரணப் பணியில் தங்குதடையின்றி ஈடுபடுவோம் என முடிவு செய்து மக்களும் நாமும் வேறல்ல என்பதை நிரூபிக்க தயாராவோம். வேலை நிறுத்தத்தை அறிவித்தவுடன் புதிய பென்சன் ரத்து செய்வது குறித்த வல்லுநர் அறிக்கை அரசிடம் வழங்கப்பட்டது. எனவே, வேலை நிறுத்தம் நடந்தால் உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

மக்களை காட்டி நம்மையும், நம்மை காட்டி மக்களையும் தொடர்ந்து ஏமாற்றிவரும் தமிழக அரசுக்கு மக்களும், நாமும் ஒன்றுதான் என நிரூபிக்கும் சூழ்நிலைதான் இந்த மகத்தான வேலை நிறுத்தம். உரிமைக்காக போராட தயாராவோம். புயல் நிவாரணப் பணிகளை தடையின்றி மேற்கொள்வோம். மகத்தான வெற்றி பெறுவோம்.

தோழர்களே, இந்நிலையில் ஜாக்டோ-ஜியோ நடத்தும் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு தடை விதிக்க உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. ஆனால் உயர் நீதிமன்றம் போராட்டத்திற்கு தடை விதிக்க மறுத்துவிட்டது. இதனிடையே, உயர் நீதிமன்ற மதுரை கிளையில் அதிமுக வழக்கறிஞர் லோகநாதன் பொது நல வழக்கு தாக்கல் செய்தார். பொதுநல வழக்கு தாக்கல் செய்த அமைப்புக்கு இந்த விஷயத்தில் தலையிட உரிமை யில்லை என உயர்நீதிமன்றம் கண்டித்துள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நீதிமன்றத்தில் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் கோரிக்கைகள் மீது எடுத்த நடவடிக்கை குறித்து தமிழக அரசு எழுத்துபூர்வமான அறிக்கையினை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டுள்ள நீதிமன்றம், வரும் 2018 டிசம்பர் 10ஆம் தேதி வரை காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தினை ஒத்திவைக்க நீதிபதிகள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் வேலை நிறுத்தம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். 10ஆம் தேதிக்குள் நமது கோரிக்கைககள் நிறைவேறாத பட்சத்தில் நமது போராட்டம் மேலும் தீவிரமடையும் என்பதை தமிழக அரசுக்கு எச்சரிக்கையாக விடுக்கிறோம்.

---

# உளுந்தூர்பேட்டையில் புயல் நிவாரண நிதி சேகரிப்பு

*செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் பயின்றுவரும் டாக்டர் ஆர்.அருண்பாண்டியன் (தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க உளுந்தூர்பேட்டை வட்டத் தலைவர் தோழர் எம்.இராஜேந்திரன் அவர்களின் மகன்) அவர்களின் முயற்சியில், அந்த மருத்துவக்கல்லூரி மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட கஜா புயல் நிவாரணப் பொருட்கள் ரூ.50,000/= மதிப்புள்ளவற்றை 22.11.18 அன்று இரவு வேளாங்கண்ணி அருகில் உள்ள செருதூர் மீனவ கிராம மக்களுக்கு.. அரசு ஊழியர் சங்க மாவட்டச் தலைவர் ப.அந்துவன் சேரல், மாவட்டச் செயலாளர் ஏ.டி.அன்பழகன், மாவட்டப் பொருளாளர் பா.ராணி ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டது. சங்க உறுப்பினர்கள் மட்டுமல்ல அவர்கள் வீட்டு பிள்ளைகளும் சமூகப்பணியில் ஆர்வலர்கள் என்பது மீண்டும் நிருபிக்கப்பட்டது.*

# சவுக்கை எடுக்கட்டும் சரித்திரம்!

## ஊதிய மாற்றத்தோடு முடிந்துவிடவில்லை உரிமைகள்



மத்திய அரசினால் 2016ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஊதிய மாற்றத்தை பெறுவதற்காக தமிழகத்தில் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் 21 மாத காலம் இந்த அரசாங்கத்துடன் போராட வேண்டியிருந்தது. 2017ல் ஜாக்டோ-ஜியோ ஒரு வலிமையான வேலை நிறுத்தப் போராட்டம் நடத்திய பின்னர்தான் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களுக்கு ஊதிய மாற்றம் ஏற்பட்டது என்பதையும், நீதிமன்றம் நம்முடைய போராட்டத்தில் நியாயம் இருந்ததால்தான் அரசாங்கத்தை உடனடியாக ஊதிய மாற்றம் அறிவிக்கப் பணித்தது என்பதையும் யாரும் மறுத்துவிட முடியாது. ஆனால் அந்த ஊதிய மாற்றத்திற்குப் பிறகு அந்த வழக்கு இன்று வரை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

2017ல் ஜாக்டோ-ஜியோ நடத்திய போராட்டத்தில் ஊதிய மாற்றத்தைத் தாண்டி பல முக்கிய கோரிக்கைகள் இருந்தன. புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெற வேண்டும், இருக்கும் ஊதிய முரண்பாடுகள், குளறுபடிகளை சரிசெய்ய வேண்டும், சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள் மற்றும் அனைத்துத் துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும், ஆசிரியர் பணித் தொகுதியில் வரும் பகுதி நேர சிறப்பு ஆசிரியர்கள், தொகுப்பூதிய ஆசிரியர்கள், கணினி ஆசிரியர்கள் போன்ற பல்வேறு பணிகளை செய்யக்கூடிய ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் உழைப்பு முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டடப்பட்டு வருகிறது. இவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர். இவர்களுக்கும் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்பட வேண்டும். நிரப்பப்படாமல் விடப்பட்டுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், மாவட்ட நீதிபதிகள் போன்றோருக்கு வழங்கப்பட்டது போல் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கும் 1.1.2016 முதல் 30.9.2017 வரை ஊதிய நிலுவைத் தொகை வழங்க வேண்டும், அரசுத் துறைகளில் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். காலியாக உள்ள பணியிடங்களில் ஒப்பந்த முறை ஊழியர்களை நியமிப்பதை விடுத்து நிரந்தர ஊழியர்களை நியமிக்க வேண்டும் போன்ற பல முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்ற அரசிடம் தொடர்ந்து கோரிக்கைகள் வைக்கப்பட்டிருந்தது. ஆனால், நடந்து முடிந்த ஓராண்டில் ஊதிய உயர்வைத் தாண்டி எந்த கோரிக்கைப் பற்றியும் அரசு செவி சாய்க்கவில்லை. ஊதிய மாற்றம் கூட பல முரண்பாடுகளுடன் ஏற்படுத்தப்பட்டு அதை சரி செய்ய புதிதான பிரதிநிதித்துவங்கள் கொடுக்க வேண்டிய நிலைதான் எழுந்தது.

## வல்லுநர் குழுவும் வஞ்சக வலையும்

2016ல் புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க சாந்தா ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ். தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அது நான்குமுறை நீட்டிக்கப்பட்டு, ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் கைவிடப்பட்டு, பிறகு மீண்டும் ஜாக்டோ-ஜியோ போராட்டக் களம் கண்டபிறகு ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ்.தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு நவம்பர் 2017க்குள் அறிக்கை அளிக்க உத்தரவிடப்பட்டது. புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்வது குறித்து பரிசீலிக்க ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, ஒரு வருட காலத்திற்கும் மேலாக அதை பரிசீலித்து அறிக்கை அளிக்காத அரசின் நயவஞ்சகத்தை எதிர்த்த பின்னர், நீதிமன்றத்தில் பரிந்துரைகளை அளிப்பதற்கான உத்தரவாதம் உறுதிபடுத்தப்பட்டது.




**ஆனால் உத்தரவாதம் அளித்து ஓராண்டு நிறைவடையும் நிலையில் இப்போது ஜாக்டோ-ஜியோ மீண்டும் காலவரையற்ற வேலை நிறுத்த ஆயுதத்தை கையிலெடுத்த பின்னர், பரம ரகசியமாக ஸ்ரீதர் குழுவின்**

**அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கை எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் திடீரென தாக்கல் செய்யப்பட்டுள்ளது அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அறிக்கையை ரகசியமாக தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வி பல கோணங்களில் யோசிக்க வைத்துள்ளது. அறிக்கை தாக்கல் செய்யவே கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில் அதை படித்து பரிசீலித்து முடிவெடுக்க இந்த அரசு எவ்வளவு காலம் எடுத்துக் கொள்ளுமோ என்ற அச்சமும், ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் மத்தியில் எழுந்துள்ளது. இந்த அச்சமே ஜாக்டோ-ஜியோவை போராட்டக் களத்திற்கு இழுத்துள்ளது.**

**ஒரு முதல்வர் ஒரு கமிட்டியிடம் இருந்து அறிக்கைப் பெறுகிறார் என்றால் அது குறித்து முன்கூட்டியே தகவல்கள் வெளியிடப்பட்டு அந்த நிகழ்வானது நடந்தால் அது வாடிக்கையான ஒன்று. ஆனால் , யாருக்கும் தெரியாமல் எவ்வித அறிவிப்பும் இல்லாமல் ஒரு முதல்வர் அறிக்கையை பெறுகிறார் என்றால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு எதிராக முதல்வரும் ஒரு நபர் கமிட்டி தலைவரும் ஏதோ சதி செய்கிறார்கள் என்றுதானே அர்த்தம் கொள்ள வேண்டியிருக்கிறது. ஊடகங்கள் வாயிலாக செய்தி அறிந்து அதுகுறித்து அமைச்சர் ஜெயக்குமார் அவர்களிடம் கேட்டால் அறிக்கை இப்போதுதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது இன்னும் பரிசீலிக்கவில்லை என்று பதில் அளிக்கிறார். இதுதான் ஒரு பொறுப்புள்ள முதல்வரும், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சரும் அவர்களின்கீழ் பணியாற்றும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களிடம் காட்டும் அணுகுமுறை.**

ஒரு நபர் வல்லுநர் குழு அமைத்தது தொடர்பான அரசு செய்திக் குறிப்பில் "நடைமுறையில் உள்ள ஓய்வூதியத் திட்டத்தை மேம்படுத்துவதற்கான பணிகளையும் மேற்கொள்ளும்'' என்ற ஒரு புதிய அறிவிப்பும் சேர்த்திருந்தது. நடைமுறையில் உள்ள ஓய்வூதியத் திட்டத்தை மேம்படுத்துவது என்றால் இந்த புதிய பென்சன் திட்டம் தொடரப் போகிறதா என்ற அச்சம் எழ, அது குறித்து அரசிடம் அப்போதே தெரிவிக்கப்பட்டதும் அரசு அதற்கு பதில் தராமல் தற்போது அறிக்கையை எந்தவித அறிவிப்பும் இல்லாமல் பெற்றுக்கொண்டுள்ளதும் சந்தேகத்தை உறுதிப்படுத்தும் சமிஞ்சையாகவே பார்க்க வேண்டியுள்ளது.

## ஆதிசேஷய்யாவும் தனியார்மய ஏற்பாடுகளும்

11.10.2017ஆம் தேதி ஊதிய மாற்றம் தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசின் வருவாய் இனச் செலவினங்களைக் குறைத்திட பல்வேறு துறைகளில் உள்ள பணியாளர் நிலைகளை ஆய்வு செய்து அதில் தேவையற்ற பணியிடங்களை இனங்கண்டறியவும் இதரப் பணியிடங்களில் வெளிமுகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ முதல்கட்டமாக பணி நியமனங்களை மேற்கொள்ள தக்க பரிந்துரைகளை அளித்திட "பணியாளர் சீரமைப்புக் குழு'' (Staff Rationalization Committee) உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு அரசு ஊழியர்கள் சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அரசுப் பணிகளை சீரமைக்கும் முறையாக இது காட்சிப்படுத்தப்பட்டாலும் ஆதிசேஷய்யா குழுவின் நோக்கம் அரசுப் பணியிடங்களை குறைப்பதைத் தாண்டி, தனியார் வசம் அவற்றை ஒப்படைப்பதற்கான நடைமுறை ஏற்பாடே என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம், கணக்கு மற்றும் கருவூல கணக்குத் துறை தனியார்மயமாக்கலை நோக்கிய நடவடிக்கையாகும்.

## முதல்வரின் பெருமை காணீர்

முதல்வர் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார். தன்னுடைய ஆட்சியில்தான் தமிழ்நாட்டில் அதிகப்படியான போராட்டங்கள் நடத்தப்பட்டிருப்பதாக பேசுகிறார். போராட்டங்கள் அதிகமாகிப் போய்விட்டதற்கு காரணம், திறமையற்ற நிர்வாகமும், நியாயமற்ற முடிவுகளும், பிரச்சனைகளை அதன் பிரத்தியேகத் தன்மையுடன் அணுகத் தெரியாத அறியாமையும்தான் என்பதை முதல்வர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதிகார வர்க்கமாய் அறியப்படும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 1.1.2016 முதல் ஊதிய மாற்றம் பெற்று விட்டார்கள். ஆள்பவர்களுக்கு ஏவல் புரியும் காவல்துறை, ஐ.பி.எஸ்.களும் 1.1.2016 முதல் நிலுவை பாக்கியின்றி ஊதியம் பெற்று விட்டார்கள். மக்கள் பிரதிநிதிகளாய் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் முதல் கேபினட் அமைச்சர்கள் வரை 100 சதவீத சம்பள உயர்வு பெற்று விட்டனர். ஐந்தாண்டுகள் மட்டுமே சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தாலும் அவர்கள் ஆயுள் முழுவதும் ஓய்வூதியம் பெற அந்தத் தொகையையும் ஆட்சியாளர்கள் உயர்த்தி விட்டார்கள். மாவட்ட நீதிபதிகளும் 1.1.2016 முதல் நிலுவைத் தொகை பெற்று விட்டார்கள். நாம் இவற்றையெல்லாம் ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்கவில்லை?

அரசாங்கத்தின் உயர் பதவிகளில் உள்ளவர்களுக்கு ஒரு நியாயம்; சாதாரண ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கு வேறு நியாயம் என்றால் போராட்டம் வெடிக்காமல் என்ன செய்யும்?

அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்களுக்கான ஊதிய மாற்றத்திற்காக போராடினால், அதிகார வர்க்கத்தினர், நடத்தை விதி மீறல் என்கிறார்கள், போராடத் தடை என்கிறார்கள், அலுவலகக் குறிப்பாணை கொடுக்கிறார்கள். இவற்றை எல்லாம் நீதிமன்றத்தின் மூலம் நியாயப்படுத்துகிறார்கள். உண்மையான நிதிச் சுமைக்கு முதலில் தோள் கொடுக்க வேண்டியவர்கள் ஆட்சியாளர்களும், அதிகார வர்க்கமும் தானே. அவர்கள்தான் நிர்வாகத்தை எப்படி நடத்துவது என்று திட்டமிடுகிறார்கள். அவர்கள் தங்களுக்கானதை எல்லாம் எடுத்துக்கொண்டு, “கஜானாவில் எதுவுமில்லை அதனால் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் நிலுவைத் தொகையை கேட்கக் கூடாது’’ என்று சொல்வது எந்த நாட்டிலும் ஏற்றுக்கொள்ள முடியாத அநியாயம் அல்லவா?

## எதிர்காலத்தை இருளாக்கும் நடவடிக்கைகள்

இவை மட்டுமின்றி அரசியலமைப்பு சட்டம் வகுத்துள்ள எல்லோருக்கும் கல்வி வழங்க வேண்டியது அரசின் கடமை என்ற கோட்பாட்டிலிருந்து விலகி புற்றீசல் போல தனியார் பள்ளிகளை துவக்க தாராள அனுமதி வழங்கி அரசுப் பள்ளிகளில் அடிப்படை வசதியின்மை, ஆசிரியர்கள் குறைபாடு போன்றவற்றினால் பொதுமக்களே அரசுப் பள்ளிகளை நாடாமல் தனியார் பள்ளிகளுக்கு செல்லும் நிர்ப்பந்தத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளதோடு, கல்வியிலும் தனியார்மயத்தினை கொண்டுவரும் நோக்கில் 5,000 அரசுப் பள்ளிகளை இணைப்பு என்ற பெயரில் மூடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் பொதுமக்கள் நலனுக்கு எதிரான நடவடிக்கைகளாகும். இவற்றையெல்லாம் வாய் மூடிக்கொண்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க அரசு ஊழியர்கள் ஒன்றும் அரசின் அடிமைகள் அல்ல. பொதுமக்களில் ஒரு பகுதியினர்தான் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும். எனவே மேற்கண்ட பிரச்சனைகளை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பிரச்சனையாகப் பார்க்காமல் பொதுமக்கள் நலம், இளைஞர்களுக்கான அரசு வேலை வாய்ப்புகள், குழந்தைகளின் கல்வி போன்றவற்றிற்காக நாம் இன்னொரு போராட்டத்தை கையிலெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது.

## ஜாக்டோ-ஜியோவும் கூடுதல் பலமும்

ஒன்றுபட்டு போராடி உரிமைகளை கண்டிப்பாக வெல்லலாம் என்ற நிலைமை கனிந்து வந்த வேளையில் அரசின் பிரித்தாண்ட சூழ்ச்சியினால் புதிய ஓய்வூதியத் திட்டத்தை நீக்க எடுக்கப்பட்ட முனைப்பான நடவடிக்கைகள் முனை மழுங்கிப் போயின. அதன் காரணமாகவே இன்று வரை நாம் பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடர்வதற்கான உத்தரவுகளை அரசிடமிருந்து பெறுவதில் தாமதங்களை சுமக்க வேண்டிய நிலை எழுந்தது. அரசாங்கத்தின் கபட நாடகத்தை புரிந்து கொண்டு கூட்டமைப்பிலிருந்து பிரிந்து போனவர்கள் மீண்டும் வந்து சேர்ந்திருக்கிறார்கள். இதனால் ஜாக்டோ- ஜியோவின் பலம் இன்னும் கூடியுள்ளது. இப்போது நாம் மீண்டும் ஒன்றிணைந்து ஒரு மாபெரும் சக்தியாக மாறியிருக்கிறோம். நாட்டில் ஏற்பட்டிருக்கும் கல்வி உரிமை பறிப்பு, வேலை வாய்ப்பின்மை, விவசாயம் நலிவடைந்துள்ள நிலை, தனியார்மயத்தின் ஆதிக்கம், ஊழல், கொள்ளை போன்றவற்றை தட்டிக் கேட்கும் முதன்மை பகுதியினராக எப்போதும் அரசு ஊழியர்-ஆசிரியர் சமுதாயம் இருக்க உறுதி பூண்டுள்ளோம். அரசிடம் நாம் ஊதியம் பெறுவது மக்களுக்காக தொண்டாற்றுவதற்காகவே. அதை சிறப்பாக செய்ய நமக்கானதையும், மக்களுக்கானதையும் நாம் ஒன்றுபட்டு கேட்பதன் மூலமே பெற முடியும் என்பதை மனதில் கொண்டு அனைவரும் போராட்ட களம் புக தயாராவோம். தர மறுக்கும் உரிமைகளை அரசிடம் தட்டிக் கேட்போம். தர மறுக்கும் சிம்மாசனத்தை சும்மாசனம் ஆக்குவோம்.

## இரக்கமற்ற அரக்க குணம்!

வந்து போனவர்கள் எல்லாம் லஞ்ச லாவண்யம் செய்து தின்று தீர்த்தபின்னர் கொஞ்ச நஞ்ச பணம்கூட கஜானாவில் இல்லை என்று பஞ்சப்பாட்டு பாடும் அரசாங்கங்கள் சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் தீர்த்துக்கட்ட நினைப்பது மக்கள் நலத் திட்டங்களையும், சலுகைகளையும் மற்றும் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கான சம்பளங்களையும்தான். வெயிலோ, மழையோ, பனியோ, புயலோ எத்தகைய இடர்ப்பாடுகளிலும், இயற்கைப் பேரிடர்களிலும் மக்கள் சேவையாற்ற அரசு ஊழியர்கள் உறுதுணையாக இருந்து வருகிறார்கள். இந்த நடவடிக்கையை சேவையாகப் பார்க்காமல் ஒரு அரசாங்கம் செலவாகப் பார்க்கும் என்றால் அந்த அரசாங்கத்திடம் இதயம் என்ற ஒன்று இல்லை என்றுதான் அர்த்தம். தங்கள் கணக்குப் புத்தகங்களில் லாபக் கணக்குகளை எட்டுவதற்காக, ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைப் பக்கங்களை கிழித்துப் போட அரசாங்கங்கள் நினைப்பது இரக்கமற்ற அரக்க குணமாகும்.

## போராட்டகளமும், போர்க்களமும் வேறு வேறல்ல!

உரிமை மீட்பு என்று வந்து விட்டால் போராட்டக் களத்திற்கும், போர்க்களத்திற்கும் எந்த வேறுபாடும் கிடையாது என்ற அடிப்படைச் சித்தாந்தத்திலிருந்து நாம் யாரும் விலகிவிடாமல் இருக்க வேண்டும். சென்ற ஆண்டு நடந்த காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் வேலை நிறுத்தம் செய்வதற்கு நீதிமன்றம் தடை விதித்த பிறகும், ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு மன உறுதியோடு நின்றது. இதன் உறுதிப்பாடும் வலிமையும்தான் ஊதிய மாற்றம் உடனடியாக ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரசுக்கு நீதிமன்றம் உணர்த்தி அழுத்தம் தர வழிவகுத்தது. சாதாரண ஆசிரியனையும் அரசு ஊழியனையும் அந்தப் போராட்டம் போர் வீரனாக மாற்றியிருந்தது. அதிகார வர்க்கம் ஏவும் அடக்குமுறைகளும், அரசாங்கம் கூறும் பொய்யுரைகளும், நீதிமன்றம் போடும் தடைகளும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான சவால்களாக நின்றன. விரோதமோ, துரோகமோ, தடையோ, சிறையோ எந்த சவால்களாக இருந்தாலும் அதை எதிர்கொள்ளும் வீரமும் தீரமும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உண்டு என்பதை 1988, 2003 போராட்டங்களுக்குப் பிறகு 2017ல் மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அது போன்றதொரு சவாலை ஒன்றுபட்ட உறுதிப்பாட்டோடு உடைத்தெறிவதே இப்போதும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் தலையாய நோக்கமாக மாறியிருக்கிறது.

## உலகம் கண்டிராத உன்னத சக்தி!

அதிகார வர்க்கத்திற்கு எதிராக சமரசமற்ற போராட்டங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் தொழிலாளர், உழைப்பாளர், ஊழியர் வர்க்கம் போராட்டக் களத்தில் நிற்கும் வரைதான் அதற்கான உரிமைகள் உறுதிபடுத்தப்படும் என்பதை பறைசாற்றிய யூஜின் விடெப்ஸ் என்ற தொழிலாளி எழுதி வைத்த கவிதையின் சாராம்சம் கிட்டத்தட்ட 110 ஆண்டுகளுக்குப் பிறகும் அப்படியே இருக்கிறது என்றால் அதற்குக் காரணம், இடைவிடாத போராட்டங்கள் மட்டுமே உழைப்பாளர், தொழிலாளர், ஊழியர் வர்க்கத்தினரின் உரிமைகளை நிலைக்க வைத்திருக்கிறது என்பதுதான். “தொழிலாளர் இயக்கம் பத்தாயிரம் முறை விழும், எழும், அதன் குரல்வளை இறுக்கப்படும், தொண்டை அடைக்கப்படும், நீதிமன்றம் கேள்விக்கணைகளைத் தொடுக்கும், குண்டர்களால் தாக்கப்படும், பத்திரிகைகளால் வசை பாடப்படும், அரசியல்வாதிகளால் ஏய்க்கப்படும், கோழைகளால் நடுவீதியில் விடப்படும், துரோகிகளால் வஞ்சிக்கப்படும், தலைவர்களால்கூட விற்றுவிடப்படும், இவ்வளவு சோதனைகள் இருந்தாலும் இந்த வையகம் இதுவரை கண்டிராத உன்னத சக்தி வாய்ந்தது உழைக்கும் மக்களின் போராட்டம் ஒன்றுதான் ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டிருக்கும் பாட்டாளிகளை விடுதலை செய்வதும், உரிமைகளை மீட்பதும் காப்பதும் இதன் வரலாற்றுக் கடமையாகும், இதன் வெற்றி சர்வ நிச்சயமே,'' என முடியும் அந்தக் கவிதை, ஜாக்டோ-ஜியோ எதிர்கொள்ள உள்ள போராட்டச் சூழ்நிலையோடு பொருந்திப் போகிற ஒன்றாகும்.

## போராளி உருவாவதில்லை, உருவாக்கப்படுகிறான்!

**போராட்டம் என்ற ஒன்று வரும்போதுதான் அரசு ஊழியனோ, ஆசிரியனோ ஒன்று காணாமல் போகிறான் அல்லது கண்டெடுக்கப்படுகிறான், இல்லையெனில் வேறொருவன் ஆகிறான், ஒரு கோஷம், ஒரு மறியல், ஒரு கைது, ஒரு விடுதலை, இவற்றின் மூலம், எதுவுமற்றவனாயிருந்தவன் எதிர்காலப் போருக்கான எல்லாத் தடவாளங்களையும் அவனுக்குள் தயாரித்துக் கொள்கிறான். கரப்பான் பூச்சிக்கு அஞ்சும் அவன்தான் காவல்துறையின் பூட்ஸ் கால்களை ஒரு ஈசலைத் தட்டுவதைப் போல் தட்டுகிறான். சிறைகளுக்குள்ள அடைபட்டுக் கிடந்தாலும் விடுதலைக்கான புரட்சிக் கவிதைகளை எழுதும் கவிஞனாகிறான், ஒரு துளி வியர்வைக்குக்கூட கைக்குட்டையைத் தேடும் அவன், போராட்டங்களில் லத்தி அடியில் உதிர்க்கும் செங்குருதியைக்கூட பன்னீர்துளிகளைப் போல உணரத் தலைப்படுகிறான். அடக்குமுறை ஏவும் அரசாங்கத்தின் பார்வையிலிருந்து ஒளிந்துகொள்ளும் முயல்போல் ஒதுங்கிக் கிடந்தவன் சிலபோராட்ட அனுபவங்களுக்குப் பின் சிங்கம்போல சீறி எழுகிறான். போராட்டங்கள் பழையவனை சாகடிக்கிறது, போராட்டங்கள் அவனது அன்றாடங்களை மாற்றியமைக்கிறது. போராட்டங்கள் தான் நாடுகளைக் கட்டமைக்கிறது. போராட்டங்கள்தான் இப்போதைய தலைமுறைக்கான இருப்பையும் எதிர்காலச் சந்ததிக்கான நெருப்பையும் அடைகாத்து வைக்கிறது. எனவே போராட்டம் மட்டுமே உரிமைகளை மீட்டெடுப்பதற்கான வழி. உணர்வுகளை மதிப்பதற்கான மொழி. அந்த லட்சியத்தை அடைவதற்காகத்தான் ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு மீண்டும் ஒரு போராட்ட களத்திற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொண்டிருக்கிறது.**

## இது உரிமைக்கான போராட்டம்!

2016ஆம் ஆண்டு முதல் நாம் ஊதிய நிலுவை மற்றும் ஊதிய முரண்பாடுகள் சரி செய்யப்படுவதற்காக தொடர்ந்து போராடி வருகிறோம். இந்த போராட்டங்கள் என்பவை ஊதிய மாற்றத்தின் அர்த்த அடர்த்தியுடன் ஊதியங்கள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் சட்டப்படியான உரிமைக்கான போராட்டங்களாகும். இந்திய அரசியலமைப்பு சட்டப்படி நியாய ஊதியங்களை அரசாங்கங்கள் வழங்காமல், அவற்றுக்குள் நுழைந்து நிலுவைகளை கொடுக்க மறுப்பதும், ஊதியங்களை குறைப்பதும் அத்துமீறிய செயல்களாகும். நியாயப்படியான தேவைகளை, மறுக்காமல் கொடுக்கும் கடமையும், பொறுப்பும் ஆட்சியாளர்களுக்கு உண்டு. அதை விடுத்து, வேலியே பயிரை மேய்ந்த கதையாய், ஆட்சியாளர்களே அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அநீதிகள் இழைத்தால் அந்தகைய ஆட்சியாளர்கள் நிர்வாகத் திறன் அற்றவர்களாகவும், மக்களுக்கான அரசை நிர்வகிக்க முடியாதவர்களாகத்தான் இருக்க முடியும்.

## ‘ச’ னா ‘ரா’ னா என்றொரு ‘சு’ னா ‘பா’ னா!

இப்போதுள்ள மோசமான நிலைமையை நாம் மாற்றாவிட்டால் நமக்கும் நமது சந்ததியினருக்கும் நாம் பெரும் துரோகம் இழைத்துவிட்டவர்களாகி விடுவோம். அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை அரசு ஏமாற்றும் போக்கை தொடரவிடாமல் அதற்கு தக்க பாடம் புகட்ட வேண்டும். முதன்மை அமைச்சர் மற்றும் துறை அமைச்சர்களின் வீட்டு வாசல் மற்றும் அலுவலக வாசல்களில் காத்திருந்து அவர்களுக்கு பூங்கொத்து கொடுத்து அவர்களை சந்தித்துப் பேசி கடிதம் கொடுத்ததாக கூறிக்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் ‘ச’ னா ‘ரா’ னாக்கள் சென்ற முறையும் முதல்வர் பரிசீலித்து செய்வதாக உறுதி அளித்திருக்கிறார் என்று பேட்டி யளித்தார்கள், இந்தமுறையும் அதையே செய்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை அருவெறுக்கச் செய்துள் ளனர். இந்த ‘ச’ னா ‘ரா’ னா கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற வகையில் அறிக்கை வெளியிட்டு முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்ததால்தான் ஊதிய மாற்றம் ஏற்பட்டதாகவும் கதைக்கிறார்.

ஜாக்டோ-ஜியோவின் காலவரையற்றப் போராட்டம் நீதிமன்றத்தால் தடுக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் அரசாங்கம் ஊதிய மாற்றம் ஏற்படுத்தியதை ஒரு வருட காலத்திற்குள் மறந்து விடுவதற்கு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் ஏமாளிகள் அல்லர், எப்போதும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு எதிராக, அரசாங்கத்தின் அடிவருடியாக செயல்பட்டு அவர்கள் போடும் பிச்சைக்காக வாலாட்டி காத்திருப்பவரும், அரசு 21 மாத சம்பளத்தை பிடித்தம் செய்தபோதும் அதற்கு நன்றி கூறிக்கொண்டு ஊடகங்களுக்கு பல் இளித்து போஸும் பேட்டியும் கொடுத்தவரும்தான் இப்போது முழு பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்கப் பார்க்கிறார். இத்தகைய இழிவாளர்களை அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் ஒரு பொருட்டாக எப்போதும் கருதுவதில்லை. ஏனென்றால் காத்துக்கிடந்து பார்ப்பவர்கள் அல்லர் ஜாக்டோ- ஜியோ நிர்வாகிகள். முறைப்படி அரசாங்கம் கூப்பிட்ட பின்னரே, பேச்சுவார்த்தைக்கு சென்று, கொண்ட கொள்கையில் சமரசம் செய்து கொள்ளாமல் சுயநலமில்லாமல் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நலனுக்காக செயலாற்றியவர்கள், செயலாற்றுபவர்கள். இவர்கள் போராடிப் பெறும் உரிமைகளை, தான் பெற்றதாக தம்பட்டம் அடித்துக் கொள்ளும் தரங்கெட்ட மனிதரால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் உரிமைகள் தள்ளிப் போகலாம் ஆனால் தடைபடாது என்பதை மட்டும் ‘ச’ னா ‘ரா’ னா உணர்ந்து கொள்ள வேண்டும்.

## காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் வலியுறுத்தப்படும் கோரிக்கைகள்

அரசு நமக்கு உறுதியளித்துள்ள புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப்பெறும் நடவடிக்கைகள், 21 மாத நிலுவைத் தொகையினை பெறுதல், இடைநிலை ஆசிரியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம், ஊதிய முரண்பாடுகளை களைதல், சிறப்புக் காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வரையறுத்தல், 2003, 2004 மற்றும் பல்வேறு காலகட்டங் களில் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்களின் பணிக் காலத்தை அவர்கள் பணிக்கு சேர்ந்த நாள் முதல் வரைமுறை செய்தல் அரசாணை எண்.56ல் இளைஞர்களின் வேலை வாய்ப்பைப் பறிக்கிற வகையில் அமைக்கப்பட்டுள்ள பணியாளர்கள் பகுப்பாய்வு குழுவினை ரத்து செய்தல், பள்ளிக் கல்வித்துறை வெளியிட்டுள்ள அரசாணை எண்.100 மற்றும் 101ஐ ரத்து செய்ய வேண்டும், 5000 அரசுப் பள்ளிகளை மூடுவதைக் கைவிட்டு சமூக நீதியினைக் காத்திடவும் ஒரு மாபெரும் போராட்டக்களத்தில் நின்று நம்முடைய உரிமைகளை போராடிப் பெறுவது என்ற உறுதியோடு நாம் இருக்கிறோம். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் போராட்டக் களம் நிற்போம். அரசின் கரங்களுக்குள் இறுக்கப்பட்டிருக்கும் நம் உரிமைகளை மீட்டெடுப்போம். உரிமைகளை அரசு உறுதி செய்து உத்தரவிடும் வரை போராட்டக் களத்திலிருந்து வெளிவர மாட்டோம் என சபதம் ஏற்றிருந்தோம்.

## நீதிமன்றங்கள் மீது கடைசி நம்பிக்கை

மக்களின் கடைசி நம்பிக்கையாக இருக்கும் நீதிமன்றங்கள் இப்போதெல்லாம் அந்த நம்பிக்கையை ரணகளப்படுத்துபவையாக மாறி வருவது வேதனைக்குரிய விஷயமாகும். சென்ற வருடம் அக்டோபர் மாதத்தில் பட்டியலிடப்பட்ட ஜாக்டோ-ஜியோ வேலை நிறுத்த வழக்கு அதன்பிறகு இன்றுவரை பட்டியலிடப்படாதது நீதி நிர்வாகத்தின் மீது பாமர மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை பாழாக்குவதாக அமைந்துள்ளது. ஒருமுறை பட்டியலிடப்பட்ட வழக்கு அதன்பின் தானாகவே வாய்தாவிற்கு வந்துவிடும் நடைமுறையை நீதிமன்றங்கள் பின்பற்றாதவரை எத்தர்களும், ஏமாற்றுக்காரர்களும் புழங்கும் புகலிடமாக நீதிமன்றங்கள் விளங்கும் என்பதற்கு ஜாக்டோ-ஜியோ வழக்கு அதன் வழக்குரைஞர் பலமுறை முறையிட்டும் பட்டியலிடப்படாமல் இருப்பது மிகச்சிறந்த உதாரணம் ஆகும்.

சுமார் 8 கோடி மக்களுக்காக சேவையாற்றும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கை குறிப்பிட்டு ஒரு தேதியிட்டு ஒத்தி வைத்த நீதிமன்றம், அந்தத் தேதியில் அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளாததும், அதன்பிறகும் விசாரணைக்கு வழக்கை கொண்டு வர நீதிமன்ற பதிவாளர்களும், அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்காததும் நீதிமன்றங்கள் பாமரர்களுக்காகவோ, நிரபராதிகளுக்காகவோ செயல்பட முடியாமல் வைக்கப்பட்டுள்ளன என்பதற்கு எடுத்துக்காட்டுகளாகும். ஒருவேளை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேற்கண்ட வழக்கு முறையாகப் பட்டியலிடப்பட்டிருந்தால் இப்போது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மேற்கொள்ள எத்தனித்திருக்கும் வேலை நிறுத்தம் தேவையில்லாமல் கூட போயிருக்கும்.

## சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் உத்தரவு

கடந்த ஆண்டு நாம் நடத்திய போராட்டத்தின்போது ஜாக்டோ-ஜியோ அமைப்பினர் எந்தவித அனுமதியும் பெறாமல் சென்னை சேப்பாக்கத்தில் தொடர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும், இதனால் பொதுமக்களும், பள்ளி, கல்லூரிகள் செல்லும் மாணவ, மாணவிகளும் பாதிக்கப்படுவதாக குறிப்பிட்டு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தொடர் மறியல் செய்வதற்கு தடை விதிக்க வேண்டும் என்று ஒரு மனுவை சிகிர்த நைனா முகம்மது என்ற ஒரு வழக்கறிஞர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். வழக்கம்போல் உயர் நீதிமன்றம் தொடர் மறியல் நடத்துவதற்கு தடை விதிக்கும் என்று எதிர் தரப்பினரும் அவர்களுக்கு தூண்டுதலாக இருந்த வெற்றுவேட்டுகளும் நினைத்திருந்த நிலையில், சென்னை உயர் நீதிமன்றம் அம்மனுவை தள்ளுபடி செய்து வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வடித்திருந்தது.

மாண்புமிகு தலைமை நீதியரசர் இந்த வழக்கு உத்தரவின் முதல் வரியிலேயே வழக்கு போட்ட நபர் மீது சாட்டையை விளாசியிருக்கிறார். இந்த வழக்கு தவறான புரிதலில் போடப்பட்டுள்ளது என்றும், இந்த நீதிமன்றம் உரிமைக்காக போராடும் எந்தவொரு குடிமகனின் போராட்டத்தையும் தடுக்காது என்றம் பளார் என்று அறைந்திருக்கிறார். பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலோ, போக்குவரத்து பாதிக்கும் வகையிலோ அவர்கள் போராடுவதாக இருந்ததால் உரிய அனுமதி பெற வேண்டும். இப்போது நடைபெறும் தொடர் மறியல் போராட்டம் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் தனிப்பட்ட இடத்தில் அலுவலக நேரத்திற்கு அப்பால் நடப்பதால் இந்நீதிமன்றம் அதில் தலையிட்டு தடை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று நெற்றிப் பொட்டில் குட்டு வைத்திருக்கிறது. அதேசமயம் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தங்கள் பொறுப்புணர்ந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாத வகையில் தங்கள் போராட்டத்தை நடத்த வேண்டும் என்றும், அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும், ஆசிரியர்கள் தங்கள் போராட்டத்தின் மூலம் பள்ளி மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்றும் அறிவுறுத்தி மேற்படி மனுவை தள்ளுபடி செய்தார்.

அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் வரலாற்றில் இந்த உத்தரவு ஒரு மைல் கல்லாகும். எப்போதுமே நீதிமன்றங்கள், அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கு எதிராக உத்தரவிடும் என்று இறுமாந்திருந்தவர்களின் கம்பீரத்தை இது கபளீகரம் செய்துள்ளது. நியாயங்கள் வெல்லும் என்பதும், இந்த உத்தரவின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டையார் எழுதிய பாடல் வரிகளான ‘உண்மை ஒரு நாள் வெளியாகும், அதில் உள்ளங்கள் எல்லாம் தெளிவாகும்’ என்ற வரிகளுக்கு கிடைத்த முதல் வெற்றி இதுவாக அமைந்தது.

## தற்போது நீதிமன்ற நடவடிக்கைகள்

தோழர்களே, ஜாக்டோ-ஜியோ நடத்தும் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு தடை விதிக்க உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. ஆனால் உயர் நீதிமன்றம் போராட்டத்திற்கு தடை

விதிக்க மறுத்துவிட்டது. இதனிடையே, உயர் நீதிமன்ற மதுரை கிளையில் அதிமுக வழக்கறிஞர் லோகநாதன் பொது நல வழக்கு தாக்கல் செய்தார். பொதுநல வழக்கு தாக்கல் செய்த அமைப்புக்கு இந்த விஷயத்தில் தலையிட உரிமையில்லை என உயர்நீதிமன்றம் கண்டித்துள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நீதிமன்றத்தில் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் கோரிக்கைகள் மீது எடுத்த நடவடிக்கை குறித்து தமிழக அரசு எழுத்துபூர்வமான அறிக்கையினை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டுள்ள நீதிமன்றம், வரும் 2018 டிசம்பர் 10ஆம் தேதி வரை காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தினை ஒத்திவைக்க நீதிபதிகள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் வேலை நிறுத்தம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கோரிக்கைகள் நிறைவேறும் வரை களத்தில் இருப்போம்

தோழர்களே இதுவரை நடந்துள்ள நீதிமன்ற நடவடிக்கைகள் நமக்கு சாதாகமாகவே அமைந்துள்ள போதிலும், இதன் பிரதான வழக்கில் தீர்ப்பு வரும்போது மட்டுமே நம்முடைய உரிமைகள், கோரிக்கைகள், போராட்டங்களுக்கான உண்மையான பலன் என்ன என்பது தெரியவரும், தற்போது வழங்கப்பட்டுள்ள இடைக்கால உத்தரவு நமக்கு சாதாகமாக உள்ளதாலேயே நாம் வென்று விட்டதாக எண்ணி நம்முடைய போராட்டங்களை விட்டுவிட முடியாது. நமக்கான கோரிக்கைள் அனைத்தும் நிறைவேற்றப்படும் வரை நாம் நம்முடைய ஒற்றுமையையும், உறுதிப்பாட்டையும் ஒன்றிணைந்து காக்க வேண்டும். இந்தப் போராட்டம் ஒரு சைக்கிள் பந்தயம் போல. இலக்கை அடையும் வரை பெடலை மிதித்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சைக்கிளிலிருந்து குப்புற கீழே தள்ளப்பட்டுவிடுவோம் என்கிற எச்சரிக்கை உணர்வோடு நீதிமன்றத்தின் அடுத்த கட்ட நிகழ்வுகளை உன்னிப்பாக கவனிப்போம். உரிமைகளை பெறுவதில் உறுதியுடன் இறுதி வரை ஒற்றுமையுடன் களம் நிற்போம்.

உரிமையை மறுக்கும்
அதிகார வர்க்கத்துடன் மோதும்
நிராயுதபாணிகள் நாங்கள்.
நாங்கள் சாதாரணனர்கள்தாம்
ஆனால் எங்கள் மனவலிமை
சர்வ வல்லமை படைத்தது.
'மாற்றம் வந்தே தீரும்' என்ற
நம்பிக்கையை ஊற்றி
வளர்த்தெடுத்த இயக்கம்தான்
எம் இயக்கம்.
போராடிப் பெற்ற உரிமைகளை
போராடிக் காக்க
போர்க்களம் பூண்டோம் நாங்கள்
அதிகார மையங்களே
ஒன்றை புரிந்து கொள்ளுங்கள்
எங்கள் உரிமையை பறிக்க நினைத்தால்
சவுக்கை எடுக்கும் சரித்திரம்,
இதுவரை இதுதான் சத்தியம்.

## கஜா புயல் நிவாரண பொருட்கள் சேகரிப்பு

*கிருஷ்ணகிரி மாவட்ட TNGEA சார்பாக டெல்டா மக்களுக்காக கிஷ்ணகிரி, ஓசூர் நகரங்களில் மாவட்ட செயலாளர் சி.பி.ஜெயராமன் மற்றும் மாவட்ட பொருளாளர் எஸ்.நடராஜன் ஆகியோர் தலைமையில் வட்ட நிர்வாகிகள், வெங்கேடேசன், நந்தகுமார், ராமசாமி, கிருஷ்ணன், சிவா, சக்திவேல், மோகன், மாவட்ட நிர்வாகிகள் ஜெயலட்சுமி, தேன்மொழி, தேவராஜ் மற்றும் முன்னணி ஊழியர்கள் தமிழகத்தில் டெல்டா மாவட்டங்கள் மற்றும் புதுக்கோட்டை ஆகியவற்றில் கஜா புயல் கோர தாண்டவத்தால் அனைத்தும் இழந்து தவிக்கும் மக்களுக்கு நிவாரண பொருட்கள் சேகரிக்கப்பட்டது. அரிசி மூடைகள்,பருப்பு, ஆடைகள், விரிப்பான்கள், பக்கெட்டுகள், மளிகை சாமான்கள், சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்கள் சுமார் 1 லட்சம் ரூபாய் பெறுமான நிவாரண பொருள் சேகரிக்கப்பட்டது.*





# உயிர் கொடுத்து இயக்கம் காத்த வெண்மணித் தியாகிகள்

"குடியானவன் வீட்டு
அடுப்பெரியாத போதும்
கோபாலகிருஷ்ணர்கள்
குளிர் காய்ந்துகொள்ள
விறகாய் எரிந்தது
வெண்மணி விவசாயிதான்"

- **இன்குலாப்**

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று பேசி ஆட்சிக்கு வந்த பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் தமிழ் நாட்டில் கீழதஞ்சையில் வெண்மணியின் 44 கண்மணிகளை நிலப்பிரபுத்துவத்தின் தீ நாக்குகளுக்குத் தின்னக் கொடுத்தோம்.

1967ஆம் ஆண்டு நாகப்பட்டினம் தாலுக்காவில் விவசாய தொழிலாளர்களுக்கு அறுவடைக் கூலியாக 5 படி நெல் கூலி வேண்டும் என சென்னையில் முதல்வர் அண்ணா வீட்டில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. தோழர்கள் வி.பி.சிந்தன், கே.ஆர்.ஞானசம்பந்தம், மீயன்னா என அழைக்கப்படும் மீனாட்சிசுந்தரம் ஆகியோர் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். அரசின் சார்பில் முதல்வர் அண்ணா மற்றும் அமைச்சர் கருணாநிதி, அமைச்சர் சாதிக்பாட்சா ஆகியோர் கலந்து கொண்டு நான்கரைப் படி என ஒப்பந்தம் பேசினர். அரைப்படி நெல் கூலி உயர்வு வழங்க அரசுக்கும், நிலப்பிரபுக்களுக்கும் மனமின்றி பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இந்நிகழ்வின் மூலம் ஆட்சியாளர்களின் வர்க்கச் சார்பை உணர முடிந்தது.

அதே ஆண்டு அக்டோபர் மாதம் 5 ஆம் நாள் பூந்தாழங்குடி அருகில் கருப்பூர் 6ஆம் எண் பண்ணையில் தொழிலாளர்களுக்கு அறுவடைக் கூலியாக நியாயமான 6 படி நெல் கொடுத்தார் என்பதற்காக அவரை எதிர்த்தும் அங்கு அறுவடை செய்யும் விவசாய தொழிலாளர்களைத் தாக்கவும் மாங்குடி கிருஷ்ணமூர்த்தி ஐயர் தலைமையில் 60க்கும் மேற்பட்ட மிராசுதாரர்கள் மற்றும் அடியாட்கள் மாங்குடி கடைத்தெருவிலிருந்து தப்படித்து கொம்பு ஊதிக்கொண்டு ஊர்வலமாகச் சென்று அங்கு அறுவடை செய்த



விவசாய தொழிலாளர்களை அடித்து விரட்டியும் அங்கிருந்த செங்கொடியை வெட்ட வரும்போது தோழர்கள் கொடியைச் சூழ்ந்துகொண்டு பாதுகாத்தனர்.

எனினும் காவல் துறையினர் மிராசுதாரர்களுக்கு ஆதரவாகவே நடந்து கொண்டனர். அதன் விளைவாக நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் பூந்தாழங்குடி பக்கிரிசாமி கொல்லப்பட்டார். இந்நிகழ்வில் உயிர்ப்பலி நேர்ந்த போதும் விவசாய தொழிலாளர்கள் மீதே பொய்வழக்கு புனையப்பட்டது.

மேலும் திருவாரூர் அருகில் கேக்கரை கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றம், கூலி உயர்வு, பொதுக் குளங்களில் சேரி மக்களுக்கும் பங்கு தர வேண்டும் என தொடர்ந்து மக்களைத் திரட்டிப் போராடி வெற்றி பெற்று வந்தார் ராமச்சந்திரன். அதைச் சகித்துக் கொள்ள முடியாத ஆதிக்க கும்பல் 1968-அக்டோபர் 15 அன்று மறைந்திருந்து ராமச்சந்திரனை வெட்டிச் சாய்த்தது. இது தொடர்பாக கொடுக்கப்பட்ட புகார் மீதும் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்நிலையில் நாகப்பட்டினம் தாலுக்காவில் மிராசுதாரர்களின் காட்டு தர்பார் விவசாய தொழி லாளர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. நெல் உற்பத்தியாளர் சங்கப் பொறுப்பேற்ற இரிஞ்சியூர் கோபால கிருஷ்ண நாயுடு அச்சங்கத்தில் விவசாய தொழிலாளர்களைச் சேர்த்துத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள பெருமுயற்சி செய்தார். ஆனால் விவசாய தொழிலாளர்கள் செங்கொடி இயக்கத்தில் ரத்தமும் சதையுமாய் பிண்ணிப் பிணைந்தவர்களாக... சீனிவாச ராவின் பயிற்சி யில் முறுக்கேறியவர்களாக உறுதியுடன் இருந்த தனால் செங்கொடி இயக்கத்தை விட்டு வர இயலாதெனத் தீர்க்கமாகத் தெரிவித்து விட்டனர்.

கோபாலகிருஷ்ண நாயுடுவின் சொந்த ஊரான இரிஞ்சியூரில் சின்னப்பிள்ளை எனும் தொழி லாளர் செங்கொடி இயக்கப் பற்றுடன் மிராசுதாரர் புரியும் அட்டூழியங்களை அவ்வப்போது இயக்கத்திற்குத் தெரிவித்து வந்ததை அறிந்து கொண்ட கோபால கிருஷ்ண நாயுடு 1968-நவம்பர் மாதத்தில் யாருக்கும் தெரியாமல் சின்னப் பிள்ளையைப் படுகொலை செய்தார்.

சிக்கல் கிராமத்தில் விவசாய தொழிலாளர் களைச் செங்கொடி இயக்கத்தில் அணிதிரட்டிய பக்கிரிசாமியை 1968-நவம்பர் 15ல் தி.மு.க.வைச் சேர்ந்த கணபதியும் அடியாட்களும் சேர்ந்து இரவு 10.30 மணிக்கு தெருவிளக்குகளை அணைத்து விட்டு வழிமறித்து வெட்டிச் சாய்த்தனர்.

தொடரும் படுகொலை மற்றும் வன்முறை வெறியாட்டங்களுக்கு முடிவு கட்டக்கோரி தாலுக்கா செயலாளர் மீயன்னா எனப்படும் மீனாட்சிசுந்தரம் 05.12.1968 அன்று முதல்வர் அண்ணாவுக்குக் கடிதம் எழுதினார். அக்கடிதம் தீக்கதிரில் பிரசுரிக்கப்பட்டது. அதன் பிறகும் அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

விவசாய தொழிலாளர்களுக்கு அறுவடைக் கூலியாக நான்கரைப் படியிலிருந்து அரைப்படி நெல் உயர்த்தி ஐந்து படியாகக் கேட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் கூலிப் போராட்டம் நடைபெறும் காலகட்டத்தில் இரிஞ்சியூர் கோபால கிருஷ்ண நாயுடு விவசாய தொழிலாளர்களை செங்கொடி இயக்கத்திலிருந்து வெளியேறி தமது நெல் உற்பத்தியாளர் சங்கத்தில் சேர கிராமங்களின் நாட்டாமைகள் மூலம் எச்சரிக்கையும் மிரட்டலும் விடுக்கிறார். எனினும் கொள்கை உறுதியோடு இருந்ததால் விவசாய தொழிலாளர்கள் மீது கோபமும் எரிச்சலும் ஏற்படுகிறது கோபால கிருஷ்ண நாயுடுவிற்கு. சதித்திட்டம் தீட்டப்படுகிறது.

டிசம்பர் 25 இரவு கோபால கிருஷ்ண நாயுடு தலைமையில் அடியாட்களுடன் துப்பாக்கி, கம்பு, பெட்ரோல், தீப்பந்தம் என கீழ்வெண்மணியின் சேரிக்குள் நுழைந்து கலவரம் கட்டவிழ்த்து விடப்படுகிறது. அலறியடித்துக்கொண்டு ஓடினர் மக்கள். கர்ப்பிணிகள் உள்ளிட்ட பெண்கள், குழந்தைகள், ஆண்கள், வயதானவர்கள் என அனைவரையும் ரவுடிகள் தாக்கினர். தனியாக இருந்த ராமையாவின் குடிசைக்குள் ஓடி ஒளிகின்றனர். மிராசுதாரரின் அடியாட்கள் குடிசையின் பின்பக்கத் தாழ்ப்பாளைப் பூட்டி குடிசைக்கும் தீ வைக்கின்றனர். இதில் 44 உயிர்கள் எரிகின்றன. ஒரு தாய் தன் குழந்தையாவது பிழைத்துப் போகட்டும் என கையிலிருந்த குழந்தையை வெளியே வீசுகிறாள். இரக்கமற்ற மிருகங்கள் அக் குழந்தையைக் கைப்பற்றி மீண்டும் எரியும் தீயில் வீசுகின்றனர். 44 உயிர்களும் கரிக்கட்டைகளாயின.

1968-டிசம்பர் 26,27,28 தேதிகளில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 8வது அகில இந்திய மாநாடு கொச்சியில் நடைபெற்றுக் கொண்டிருந்த காலமது. செய்தியறிந்து மாநாட்டில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அஞ்சலி செலுத்தப்பட்டது. பி.ராமமூர்த்தி, மீயன்னா எனப்படும் மீனாட்சிசுந்தரம் உள்ளிட்டோர் கீழ்வெண்மணிக்கு விரைந்தனர்.

பி.ராமமூர்த்தி கோபக் கனலோடு அங்கிருந்த காவல்துறையினரைப் பார்த்து உயிரோடு இருக்கும்போது பாதுகாப்பு வழங்காத நீங்கள் எங்கள் தோழர்களை எரித்துக் கொன்ற பிறகு யாருக்குப் பாதுகாப்பு எனச் சீறிப்பாய்ந்தார்.

கீழ்வெண்மணிப் படுகொலை தொடர்பான வழக்கு இரு தரப்பினர் மீதும் அரசு தொடுத்தது. கோபால கிருஷ்ண நாயுடு உட்பட 23 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு பண்ணையார் பக்கமே சாதகமாக இருந்தது. ஆனால் காலத்தின் சரியான தீர்ப்பு 12 ஆண்டுகளுக்குப் பிறகு 1980 டிசம்பர் 14 அன்று மாலை4 மணிக்கு இரிஞ்சியூர் கோபால கிருஷ்ண நாயுடு வெட்டி வீழ்த்தப்பட்டார். நெல் உற்பத்தியாளர் சங்கமும் இரிஞ்சியூரிலேயே வீழ்ந்தது. செங்கொடி இயக்கம் வெண்மணித் தியாகிகளின் தியாகத்தால் மேன்மேலும்

வளர்ந்தது. உதிரச் செங்கொடி பட்டொளி வீசிப் பறந்தது.

வெண்மணிப் படுகொலைக்குப் பின்னர் விவசாயத் தொழிலாளர் கூலி பற்றி ஆராய்ந்து பரிந்துரை தர கணபதி பிள்ளை என்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரை ஒருநபர் குழுவாக தமிழக அரசு நியமித்தது. குழுவின் இறுதிப் பரிந்துரை வருவதற்கு முன்பாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் 1969 ஜனவரி 16ல் தஞ்சாவூரில் ஒரு முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டி கூலிகள் உயர்த்தப்படும். உள்ளூர் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்த பின், உண்மையான தேவை யிருந்தால் மட்டுமே வெளியூர் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் என்று அறிவித்தார்.

உயிரே போனாலும் செங்கொடி இயக்கத்தி லிருந்து விலக மாட்டோம் என கொள்கைப் பிடிப்புடன் இறுதி வரை உறுதியாக இருந்து உயிர் கொடுத்து இயக்கம் காத்த வெண்மணித் தியாகிகளின் தியாகம் என்றும் வீண்போகாது ◣

# வேலை நிறுத்த ஆயத்த மாநாடு

தருமபுரி மாவட்ட ஜாக்டோ- ஜியோ சார்பில் வேலைநிறுத்த ஆயத்த மாநாடு தருமபுரி செங்கூந்தர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. ஒருங்கிணைப்பாளர்கள் அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர், எம்.சுருளிநாதன், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாவட்டதலைவர் பி.எம். கௌரன், தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டதலைவர் பொன்.ரத்தினம், ஆகியோர் தலைமை வகித்தார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் வரவேற்றார். தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில துணைத் தலைவர் கு.தியாகராஜன் சிறப்புறையாற்றினார்.

அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் எஸ்.தமிழ்செல்வி, தமிழக ஆசிரியர் கூட்டணி பொதுச் செயலாளர் கோ.காமராசு, தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி முதுநிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் ஆர்.செல்வம், தமிழக தமிழ் ஆசிரியர் கழகத்தின் ஆனந்தன், தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் எம்.பழனி உள்ளிட்ட பலர் விளக்கவுரை யாற்றினர். ◣

# டிசம்பர் இருபத்தைந்து

சூரியன் உதிக்குமுன் வருதலும்-மாலை
சூரியன் மறைந்தபின் போதலும்
அடித்தட்டு வர்க்கம் உழைக்க-ஆண்டைகள்
மேல்தட்டு வர்க்கமாய்க் கொழுத்தனர்

உழைக்கும் மாந்தரை ஒடுக்க-ஆண்டைகள்
இழைத்த அநீதிக்கு அளவில்லா
சாணிப்பால் சவுக்கடி கொடுத்து-உழைப்போர்
கூனித்தான் குறுகித்தான் கிடந்தனர்

இருளுக்கு ஒளியாய் உதித்தது-சங்கம்
கருவியாய் சுரண்டலை எதிர்த்தது
சாணிப்பால் சவுக்கடிக்கு முடிவு-செங்கொடி
சங்கம் கண்டது வடிவு

மனிதனை மனிதனாய் நடத்த-உரிமை
புனிதமாய்ப் போரும் தொடர
கணிதமாய் ஆண்டைகள் சங்கம்-துவக்கி
இனியதில் சேர்ந்திடக் கோரினர்

தன்மானம் தந்தது செங்கொடி-சங்கம்
நன்மதிப்பு பெற்றதைத் துறந்து
ஆண்டைகள் அமைத்த அமைப்பில்-இனி
அணிவகுக்க மாட்டோம் என்றனர்

உழைக்கும் மாந்தரின் முடிவு-ஆண்டைகள்
இழைத்தனர் சதித்திட்ட வடிவு
பிழைக்கும் சாமானியரை எரித்து-வஞ்சம்
தழைக்க வெண்மணி தேர்வு

பெண்கள் குழந்தைகள் முதியோர்-என
நாற்பத்து நால்வரை எரித்து
நள்ளிரவில் கொடுமை அரங்கேற்றம்-வெண்மணி
உள்ளளவும் வரலாறு கூறும்

செங்கொடி காத்திட்ட தியாகம்-வெண்மணி
தங்கக் கண்மணிகளின் இயக்கம்
எங்கும் பரப்பும் முழக்கம்-சங்கம்
நோக்கும் திசையெட்டும் பரவும்

- **பெரணமல்லூர் சேகரன்**

# வருமுன் காக்க வியூகம் வகுப்போம்

இயற்கை வளம் நிறைந்த நாடு நம் நாடு. இந்தியத் திருநாட்டில் தமிழ்நாடு அனைத்து அம்சங்களிலும் முதன்மையாய் விளங்கும் மாநிலம். ஆனால் இயற்கை சீற்றம் எழும் போதெல்லாம் சேதாரச் சக்தியில் சீரழிந்து சின்னாபின்னமாவது தொடர்கதையாகிவிட்டது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வறட்சி, வெள்ளம், புயல், சுனாமி என அடுத்தடுத்து எதிர்கொண்டுவரும் இயற்கை சீற்றங்களாகும். இவற்றை எதிர்கொள்ள தேசியப் பேரிடர் மேலாண்மை என்றொரு துறை ஏற்படுத்தப்பட்டு அத்துறையின் ஆய்வு மற்றும் கணக்கீட்டைப் பொறுத்தே நிவாரண அறிவிப்பும் அமுலாக்கமும் நிகழ்கின்றன.

இந்நேர்வுகளில் அரிதான மானுட உயிர்கள் பலியானபின் எவ்வளவு ஈட்டுத்தொகை கொடுத்தாலும் இழந்த உயிர்களை மீட்கப்போவதில்லை. எனில் இத்தகைய இயற்கைப் பேரிடர்கள் நிகழும் முன்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் உயிரிழப்புகள், உடைமை இழப்புகள், இயற்கைப் பேரிடர்களின் போது பாதிக்கப்படும் மக்களைக் காத்தல் என தொலைநோக்குப் பார்வையுடன் திட்டமிடலும் அமுலாக்கமும் அவசியமாகிறது.

தமிழ்நாட்டை அண்மைக் காலங்களில் பேரிடர்களுக்குள்ளாக்கிய சுனாமி, பெருமழை, வெள்ளம், புயல் போன்றவற்றை எதிர்கொண்ட அனுபவ வெளிச்சத்தில் அரசியல், சமூக, பொருளாதார, விஞ்ஞான வல்லுனர்கள் தங்களது அறிவையும், அனுபவங்களையும் பயன்படுத்தி மனித சமூகத்தை வருமுன் காக்க வேண்டியது அவசியமாகும்.

நிஷா, தானே, வர்தா, ஒக்கி, புயல்களைத் தொடர்ந்து தற்போதைய கஜா புயல் வரை ஏற்படுத்திய பாதிப்புக்கள் உணர்த்தும் அம்சங்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்குரிய வழிகாட்டிகளாகக் கொள்வதே அறிவுடைமையாக அமையும்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் ஆகியவற்றைக் கேள்விகளாக்கும் அனுபவ வெளிச்சத்தில் அவற்றுக்கான தீர்வுகளைக் காண வேண்டியது காலத்தின் அவசியம்.

உதாரணத்திற்கு கஜா புயல் எந்த நாட்களில் எந்த பகுதிகளைத் தாக்கப் போகின்றது என்பதை இன்றைய வளர்ந்த வானிலை உயர் தொழில் நுட்பம் மூலம் அறிய முடிந்தது. அதுபோல் அறிய முடிகிறது எனில் அத்தகைய பகுதிகளில் மாவட்ட வட்ட ஒன்றிய ஊராட்சி நிர்வாகங்கள் மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக அப்பகுதி மக்களிடம் செய்திகளைக் கொண்டு சேர்த்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இயற்கைப் பேரிடர்களின் போது மக்கள் வீடுகளை விட்டு வெளியே வராமல் பார்த்துக் கொள்வது அவசியம். பாதுகாப்பற்ற வீடுகளில் வசிப்போரைப் பாதுகாப்பு மையங்களில் தங்கவைத்துப் பாதுகாக்கும் வகையில் ஒன்றியத்திற்கு ஒன்று வீதமாவது தொலைநோக்குப் பார்வையுடன் பாதுகாப்பு மையக் கட்டிடங்களைக் கட்டிப் பாதுகாக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளை காலியாக விடாமல் தேர்தல் நடத்தி மக்கள் பிரதிநிதிகளைத் தொடர்புடனே வைத்திருக்க வேண்டும்.

நாடு சுதந்திரம் பெற்று 71 ஆண்டுகளைக் கடந்த பின்பும் வீடற்றோர் வீடின்றி வாழும் அவலநிலை நீடிக்கிறது. கூரைவீடுகள் இன்னமும் தமிழகத்தில் சவாலாகவே தொடர்கின்றன. வீடற்றவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், கூரைவீடுகளில் வாழ்வோருக்கு கான்கிரீட் வீடுகளைக்கட்டிக் கொள்ள நிதியுதவி செய்தல் போன்ற அம்சங்களில் மத்திய மாநில அரசுகள் முனைப்புடன் செயல்பட்டு வீடற்றவர்களே இல்லை..கூரை வீடுள்ளவர்களே இல்லை எனும் நிலையை உருவாக்க வேண்டும்.

இப்படிப்பட்ட இயற்கைப் பேரிடர்களின் போது பாதிக்கப்படும் மக்களைப் பட்டினியில் தள்ளாமல் உணவளிக்கும் வகையில் மூன்றடுக்கு ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி அமைப்புகள் போதிய உணவு தானியங்கள், பால், போதிய எரிபொருளுடன் தயார் நிலையிலிருக்க திட்டமிட வேண்டும். இதற்குப் போதிய நிதியை மத்திய இயற்கைப் பேரிடர் நிவாரண அமைப்புகள் மற்றும் மாநில அரசும் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.



மின்சாரம் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்றாகிவிட்டது. இயற்கைப் பேரிடர்களின் போது மின்சாரம் தங்கு தடையின்றிக் கிடைக்கும் வகையில் மாநிலங்களைப் போல கிராமங்களிலும் பூமிக்குள் கேபிள் மூலம் மின்சாரம் வழங்க தொலைநோக்குடன் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். இன்றுள்ள உயர்தொழில் நுட்பத் துடன் பயன்படுத்தி இதைச் சாத்தியமாக்க வேண்டும்.

இயற்கைப் பேரிடர்களினால் பாதிக்கப்படும் மக்கள் வேளாண்மை மற்றும் உபதொழில் களுக்காக ஏற்கெனவே வங்கிகளில் பெற்ற கடன்களைத் தள்ளுபடி செய்து அம்மக்களின் அச்ச உணர்வைப் போக்க வேண்டும்.

வேளாண்மை எனில் நெல், கரும்பு, வாழை, தென்னை, முந்திரி, மற்றும் தோட்டப்பயிர்கள் எதுவாயினும் அவற்றைக் கட்டாயமாகக் காப் பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டுவர வேண்டும். எந்த விவசாயியும் எந்த வேளாண்மையையும் காப்பீடு திட்டத்திற்குள் கொண்டு வராமல் இல்லை எனும் நிலையை உருவாக்க வேண்டும். இயற்கைப் பேரிடர்களால் குவிந்து கிடக்கும்

மரங்கள் உள்ளிட்டவற்றை அரசே போர்க்கால அடிப்படையில் அப்புறப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு மீன்பிடி படகு, வலைகள் உள்ளிட்ட வாழ்வாதார உபகரணங்கள் பாதிக்கப் படும்போது அவர்களுக்கு எந்த நட்டமுமின்றி உடனுக்குடன் புதிய படகு மற்றும் மீன்பிடி உப கரணங்களை வழங்கும் வகையில் முன்னெச் சரிக்கை நடவடிக்கையாகத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

இயற்கைப் பேரிடர் மீட்புப் பணிகளை இந்திய ராணுவம், தீயணைப்பு உள்ளிட்ட சீருடைப் பணியாளர்கள், அரசு நிர்வாக அமைப்புகள், தன்னார்வ அமைப்புகள் மூலம் போர்க்கால அடிப்படையில் இரவுபகலாய் இயங்கி மக்களைக் காக்க வேண்டும். இயற்கைப் பேரிடரால் இழப்பீடுகளை எண்ணிக் கலங்கி உயிரை மாய்த்துக் கொள்ளும் கொடிய நிகழ்வுகள் எங்கும் எப்போதும் நிகழா வண்ணம் உள்ளூர் அளவிலான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இயற்கைப் பேரிடர்களின்போது கால நேரம் பார்க்காமல் அர்ப்பணிப்பு உணர்வுடன் மத்திய மாநில அரசுகளின் அதிகாரிகளும் ஊழியர்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் முனைப் புடன் சேவை நோக்குடன் செயல்பட வேண்டும்.

இயற்கைப் பேரிடர்களின்போது அனைத்து அரசியல் கட்சிகளும் அரசியல் கருதாது தங்களின் கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகளைக் களத்தில் இறக்கி மக்கள் பணி ஆற்றிட வேண்டும். மாநிலத்தில் எக்கட்சி ஆட்சியிலிருந்த போதும் நடுநிலையோடு போதிய நிதியை உடனடியாக ஒதுக்கீடு செய்தும் நிவாரணப் பணிகளில் இராணுவத்தை ஈடுபடுத்தியும் கடமையாற்ற வேண்டியது மத்திய அரசின் மகத்தான கடமை.

வருமுன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் காத்தலும் வந்தபின் கரம் கோர்த்துக் காத்தலும் என திட்டமிட்டு அரசுகளும் அமைப்புகளும் அர்ப்பணிப்பு உணர்வுடன் இயங்குவதன் மூலம் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வது மானுட சமூகத்தால் சாத்தியமே.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, நேராடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு,சுப்பிரமணியன்.*
*பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் பத்திரிகை செய்தி*

**ஊடகச் செய்தி**

# கஜா புயல் வெள்ள நிவாரணத்திற்கு அரசு ஊழியர்கள் ஒரு நாள் ஊதியத்தை வழங்கிட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் முடிவு! உதவிக்கரம் நீட்டுவோம், உறவுகளைத் தேற்றுவோம்!

ஆழிப் பெருங்கடலில் உருவான ஊழிக் காற்று தமிழகத்தின் எட்டு மாவட்டங்களில் கோரத்தாண்டவம் ஆடிச் சென்றிருக்கிறது. இன்றுவரை இயல்பு நிலை திரும்பவில்லை என்ற செய்தி எத்தனை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தும் என்ன பயன் என்று கேட்கத் வைத்திருக்கிறது. ஐந்து நாட்களுக்கு மேலாகியும் மக்கள் தண்ணீருக்கும் உணவுக்கும் அலைகின்ற அவலம் கஜா புயலின் உக்கிரத்தை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

கற்களும், மூங்கில் கழிகளும் மட்டுமே எஞ்சிய வீடுகளும், கூரைகள் சாய்ந்து உயிரிழந்த மாடுகளும், வேரோடு சாய்ந்த மரங்களில் பறவைகளோடு நசுங்கிய கூடுகளும், புயலில் சிக்கி மரணமடைந்த மனிதர்களும் எத்தனை பெரிய அஞ்சாநெஞ்சனையும் நிலைகுலையச் செய்துவிடும் காட்சிகளாகும். விளைச்சல் செய்த பயிர்கள் நீரில் மூழ்கியிருக்கும் நிலையும், நெடிதுயர்ந்த தென்னையும், முந்திரி, வாழை மற்றும் மா மரங்கள் வேரோடு பிடுங்கி வீசப்பட்டிருக்கும் காட்சிகளும், காண்போர் உள்ளங்களை கதற வைக்கும் நிகழ்வுகளாகும். இவை பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்களை அன்றாடங்களை முடக்கிப் போட்டிருக்கிறது.

தனித்தனி தீவுகளாய் மாறிவிட்ட குக்கிராமங்களில் இருந்து தண்ணீர் வேண்டும், உணவு வேண்டும், மெழுகுவர்த்தி, தீப்பெட்டிகள் வேண்டும் என்ற கூக்குரல்கள் கேட்டுக்கொண்டே இருக்கின்றன. கரையிலோ அரசியல் கட்சிகள் அனைத்தும் வழிந்தோடும் கண்ணீரைத் துடைக்க வழிதேடாமல், ஒருவருக்கொருவர் வசை போர் அரசியல் நடத்தி சுய ஆதாயம் தேடுவதிலேயே ஆளாய்ப் பறக்கிறார்கள்.

எப்போதும் போல் சமூக சேவகர்களும், தன்னார்வ சேவை அமைப்புகளும் முன்னணியில் களத்தில் இறங்கி எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் தங்களால் இயன்ற அளவுக்கு மக்களின் பசி போக்கியும், உடை கொடுத்தும், மெழுகுவர்த்தி தீப்பெட்டி மண்ணெண்னை படுக்கைவிரிப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களை அளித்தும் மனித நேயம் உள்ளது என்பதை மறுபடியும் மறுபடியும் நிரூபித்து வருகிறார்கள்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், விவசாயிகள் போராட்டம் நடத்திய போது அவர்களுக்கு ஆதரவாக நின்று போராடிய இயக்கமாகும். இந்த போராட்டங்களின் போது விவசாய சங்கங்களை சேர்ந்த தோழர்கள், இறந்துபோன விவசாயிகளின் வாரிசுகள் கல்விக் கட்டணம் செலுத்த முடியாததால் பள்ளிக்குச் செல்ல முடியாமல் உள்ளதாக தெரிவித்தனர். கடன் தொல்லையால் இறந்துபோன விவசாயிகளின் குழந்தைகள் கல்வி கற்பதற்கு கஷ்டப்படக்கூடாது என்பதுடன், அவர்களின் எதிர்காலம் பாடப்புத்தகங்களில் புதைந்து கிடப்பதால் அவர்களுக்கு உதவுவது சங்கத்தின் தலையாய கடமை என்று முடிவு செய்து அதற்கான நிதி உதவியை திரட்ட அனைத்து மாவட்டங்களுக்கும் தெரிவித்து, இறந்துபோன விவசாயிகளின்



குழந்தைகள் மட்டுமல்லாமல், கடன்தொல்லையால் அவதிப்படும் விவசாயிகளின் குழந்தைகளும் தடையின்றி கல்விபயில முட்டுக்கட்டையாக இருக்கும் பொருளாதாரத் தடையை நீக்குவதென தீர்மானித்து உண்டியல் மூலம் நிதி சேகரித்து வழங்கியுள்ளோம்.

அதுபோலவே இன்று கடும் பாதிப்படைந்த நான்கு மாவட்ட மக்களுக்கும் முதல் தேவை ஆறுதலான வார்த்தைகளும் அன்றாடத் தேவைகளுக்கான அடிப்படை பொருட்களுமே. அவர்கள் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது பணத்தை அல்ல. உணவு, உடை, இருப்பிடம் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களைத்தான். இவர்கள் முதலில் எழுந்து நிற்க நாம் அனைவரும் கைகொடுக்க வேண்டியது அவசியமாகும். கேரள மாநிலத்தில் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்ட போதே அரசு ஊழியர்கள் அண்டைமாநிலம் என்றுகூட பாராமல் மனித நேயத்தோடு உதவிக்கரம் நீட்டி ஒரு பெருந்தொகையை நிவாரணமாக அம்மாநில முதல்வரிடம் வழங்கினோம்.

இப்போது நம் மாநிலத்திலேயே சொந்த சகோதரர்கள் துன்பத்தில் துவண்டு போயிருக்கும் நேரத்தில் அவர்களுக்கு நாம் செய்ய வேண்டியது இயல்பு நிலை திரும்பும் வரை அவர்களின் அன்றாடத் தேவைகளுக்கான பொருட்களே. அரசு ஊழியர்கள் அனைவரும் பணமாக தருவதைத் தவிர்த்து மெழுகுவர்த்திகள், தீப்பெட்டிகள், டவல்கள், லுங்கிகள், புடவைகள், நைட்டிகள், டி-சட்டைகள், பிஸ்கெட்டுகள், அரிசி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களை அதற்கென்று **நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டையில் திறக்கப்பட்டிருக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கஜா புயல் நிவாரண மையத்தில் செலுத்தி அதற்கான ரசீதுகளை பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.** நிவாரணப் பொருட்களை வழங்குவோர் தங்கள் பெயர் விலாசம் மற்றும் கைபேசி எண்களை பதிவு செய்ய கேட்டுக் கொள்கிறோம். சேகரிக்கப்படும் பொருட்கள் உடனுக்குடன் மாவட்டங்களுக்கு பிரித்து அனுப்பப்பட்டு அதற்கென பொறுப்பேற்றிருக்கும் மாவட்ட சங்க நிர்வாகிகளிடம் வழங்கப்படும். நிவாரணப் பொருட்களை வைத்திருப்போர் தகவல் தெரிவித்தால் அந்த இடத்திலிருந்து நிவாரண மையத்திற்கு கொண்டுசெல்லவும் ஏற்பாடு செய்து தரப்படும்.

நிதி உதவி கொடுக்க விழைபவர்களை நாங்கள் இருகரம் கூப்பி வரவேற்கிறோம்.அவர்கள் தாங்கள் செலுத்த விரும்பும் தொகையை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம், திருவல்லிக்கேணி, சென்னை-5 முகவரிக்கு காசோலையாகவோ, வரைவோலையாகவோ அல்லது வலைதள மாற்று(Net Transfer) மூலமாகவோ செலுத்த வேண்டுகிறோம். வலைதள மாற்று மூலமாக நிதி அனுப்ப விரும்பும் தோழர்களுக்காக அது சம்பந்தப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**Tamil Nadu Government Employees Association**
**SB Account No.0346000100103835**
**IFSC Code : PUNB 0034600**
**Punjab National Bank, Trilicane Branch**

எனவே அரசு ஊழியர்களாகிய நாம் அனைவரும் சாய்ந்து கிடக்கும் நான்கு மாவட்ட மக்களை எழும்பி நிற்க ஊக்கமளிப்போம். மனித நேயம் காப்போம் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அறைகூவி அழைக்கின்றது.

மேலும், தமிழக அரசு கேரள மாநில வெள்ள நிவாரணத்திற்காக ஒரு நாள் ஊதியம் மனமுவந்து வழங்கிட அரசாணை வெளியிட்டது போன்று கஜா புயல் வெள்ள நிவாரணத்திற்கும் ஒரு நாள் ஊதியம் வழங்கிடும் வகையில் அரசாணை வெளியிட வேண்டுமெனவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறோம்.

# AISGEF தேசிய செயற்குழு கூட்ட முடிவுகள்

*"உலக தழுவிய அளவில் சிந்தித்து*
*நாடு தழுவிய அளவில் திட்டமிட்டு*
*உள்ளூர் அளவிலான ஒற்றுமையை*
*இயக்கங்களை வலுவாக கட்டுவதற்கு"*

தமிழகத்திற்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் கடந்த நவம்பர் 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் பெங்களூருவில் நடைபெற்ற தேசிய செயற்குழுக் கூட்டமும் அதில் வைக்கப்பட்ட அகில இந்திய பொதுச் செயலாளர் ஸ்ரீகுமாரின் மன உறுதிமிக்க அறிக்கையும், சவிதா அவர்களுடன் சத்தீஸ்வர், கேரளா, பெங்களூரு, மத்திய பிரதேசம், ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து பங்கேற்ற மகளிர் சம்பந்தமான கோரிக்கை சார்ந்த ஆலோசனையும் நடைபெற்றது. முன்னதாக பெங்களூருவில் உள்ள தேசிய AISGEF பொறுப்பாளர்கள் சிவசங்கர், ஜெயக்குமார் ஆகியோருடன் தொடர்பு கொண்டு தமிழ்நாடு சார்பாக தேசிய செயற்குழுவில் பங்கேற்பவர்களின் பட்டியலையும், நமது பயண நேரத்தையும் கேட்டறிந்து வரவேற்று காவேரி கெஸ்ட் அவுசில் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. ஷோபா பெங்களூரு மாநில மகளிர் துணைக் குழு அமைப்பாளர் மற்றும் தோழியர்களின் அன்பான உபசரிப்பு சிறப்பாக இருந்தது.

காந்தி பவனில் 26ஆம் தேதி மதியம் 2 மணிக்கு தொடங்கிய தேசிய செயற்குழுவில் 22-க்கும் மேற்பட்ட மாநிலங்கள் பங்கேற்று பொதுச் செயலாளர் வைத்த அறிக்கையின் மீது விவாதத்தை செழுமையோடும், எழுச்சியோடும் கருத்துக்களை பதிவு செய்தனர். கூட்டப் பொருளாக 8 பதிவுகள் முன்வைக்கப்பட்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விவாதத்தில் பங்கேற்ற அனைத்து மாநிலங்களிலும் கடந்த தேசிய செயற்குழுவுக்கு பிறகு (விஜயவாடா ஜூலை 14,1 5) புதிய பென்சன் திட்டத்திற்கு எதிரான போராட்டமும், மதிப்பூதிய, தொகுப்பூதிய ஊழியர்களின் போராட்டங்களை யும், காலிப் பணியிடங்களையும் நிரப்புவதற்கான போராட்டங்களையும் தொடர்ச்சியாக நடத்து வதை பதிவு செய்தனர். அசாம், இமாச்சல பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் தொழிற் சங்கம் நடத்துவதே மிகப்பெரிய சவாலாக உள்ளதை பதிவு செய்தனர். தமிழ்நாட்டில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடர்ச்சியாக போராட்டத்தின் மூலம் ஊழியர்களின் முன்னேற்றத்தை கண்டுள்ள வித்தியாசத்தை காண முடிந்தது.

ஆந்திரப் பிரதேசத்தில் மாநில மையம் அம்மாநில முதலமைச்சருடன் கடந்த மாதம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. மதிப்பூதிய, தொகுப்பூதிய ஊழியர்களின் பிரச்சனைகளையும், பெண் அரசு ஊழியர்களின் மகப்பேறு விடுப்பு, அரசு ஊழியர்களின் பணி ஓய்வு வயது உள்ளிட்ட கோரிக்கைகள் சம்பந்தமாக அமைச்சர்கள், அதிகாரிகளுடன் கலந்து பேசி முடிவுகள் அறிவிப்பதாக நம்பிக்கையான பதிலை மாநில நிர்வாகிகளுக்கு அளித்துள்ளதாக விவாதத்தில் பங்கேற்ற அசோக் பாபு பதிவு செய்ததும், ஏற்கனவே ஆந்திர அரசு, சங்கத்திற்கு சங்கக் கட்டிடம் கட்டுவதற்காக 6,000 சதுர அடி மனையை ஒதுக்கி இருப்பதை கடந்த தேசிய செயற்குழுவில் பதிவு செய்ததையும், நமது தமிழக அரசு உழைக்கும் வர்க்கப் போராட்டங்களிலும், விவசாயிகளின், மாணவர்களின், அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் போராட்டங்களிலும் எந்த பகுதியினரின் இயக்க நடவடிக்கைகளையும் பொருட்படுத்தாத அரசாக இருப்பதை நினைவுகூற வேண்டியுள்ளது.

அசாம் மாநிலத்தில் கடந்த மாதம் 21 நர்ஸ் ஊழியர்களை அந்த அரசு டிஸ்மிஸ் செய்த நடவடிக்கையை எதிர்த்த இயக்கத்தை வலுவோடு நடத்தியதையும், வெளி முகமை மூலம் நிரப்பப்படும் ஊழியர்களின் ஊதியத்தை பெற தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி யதையும் ஸ்தாபனம் நடத்துவதே சவாலான பணியாக மாறியுள்ளதையும் எடுத்துக் கூறியதோடு மட்டுமல்லாது, இப்படிப்பட்ட சூழலிலும் AISGEF சங்க கட்டிடத் தொகையை வசூல் செய்து கொடுத்தும் இனியும் முயற்சிகள் தொடர்ந்து இலக்கை அடைவோம் என்று பேசிய கருத்துகள் எழுச்சியூட்டுவதாக அமைந்தது.

பீகார், அரியானா மற்றும் சத்தீஸ்கர் போன்ற மாநிலங்களில் இருந்து பங்கேற்ற தோழர்கள் காண்ட்ராக்ட், அவுட் சோர்சிங், மதிப்பூதியம், தொகுப்பூதிய ஊழியர்களுக்கான போராட்டங் களை தொடர்ந்து நடத்துவதாகவும், அம்மாநிலங் களை ஆளும் அரசுகள் எவ்வித அறிவிப்பும்

இல்லாத நிலையில் போராட்டத்தை AISGEF-க்கு விடப்பட்ட சவால் என்பதையும் வலியுறுத்தி பேசிய விதம் தொழிற்சங்கம் அமைக்கவே இன்றும் போராடுகிறோம் என்பது மிகவும் நெகிழ்வாக இருந்தது. சத்தீஸ்கர் மாநிலத்தில் அங்கன்வாடி ஊழியர்களின் போராட்டம் மாநிலத்தில் வலுசேர்ப்பதாக இருந்ததை பதிவு செய்தனர்.

AISGEF மாநாட்டையும், பெண்கள் மாநாட்டையும் கம்பீரத்துடன் கடந்த காலத்தில் நடத்தி இந்தியாவுக்கே முன்னுதாரணமாகவும், AISGEF-ன் தலைமையிடமாக விளங்கிய மேற்கு வங்கத்தில் இருந்து அம்மாநில கூட்டு நடவடிக்கைக் குழு மற்றும் மேற்கு வங்க அரசு ஊழியர்கள் சம்மேளன பொதுச் செயலாளர் பைஜாய் சங்கர் சின்ஹா கடந்த காலத்தை காட்டிலும் தொழிற்சங்கத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டிய அவசியமும், அம்மாநிலத்தில் தொழிற் சங்கங்கள் தொடர்வதில் உள்ள நெருக்கடியையும் தாண்டி முன்னேறுவோம் என்ற உணர்வோடு ஊழியர்களின் காண்ட்ராக்ட், அவுட்சோர்சிங் நெருக்கடிகளும் கடந்த தேசிய செயற்குழுவுக்கு பிறகு மேற்கு வங்கத்தில் பாஜக நடத்திய "ரத யாத்திரை" மக்ககளை மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளதையும் வரும் நாடாளுமன்ற தேர்தலில் நாடு முழுவதும் பாஜக-வை புறக்கணிக்கும் பணிகளில் AISGEF-ன் பணிகள் பிரதானமாக அமைய வேண்டியதையும், இதே காலகட்டத்தில் அம்மாநில மையம், "மாநில மகளிர் துணைக் குழு போராட்டங்கள் - கருத்தரங்களை" நடத்தியதுடன், அதில் வெற்றியும் கண்டுள்ளதையும் பதிவு செய்த விதம் "சாவித்திரிபாய் பூலேவும், அவரது கணவரும் இணைந்து பல அவமானங்களை சந்தித்து கொடுத்த பெண் கல்வி" மீண்டும் தழைத் தோங்கும் அம்மாநிலத்தில் என்ற உத்வேகத்தை உண்டாக்கியது.

மணிப்பூர், இமாச்சல பிரதேசத்தில் சங்கமே வைக்க முடியாத சூழல் உள்ளதையும் (அரசு ஊழியர்களுக்கென்று) போராட்டம் நடத்த வேண்டுமென்றால் அவ்வப்போது சிஐடியு போன்ற தொழிற்சங்க அமைப்புகளுடன் இணைந்துதான் போராட்டத்திற்கு செல்கின்றோம். பெரிய நெருக்கடிகள் உள்ளது என்றும் அடுத்த செயற்குழுவில் அறிக்கை வைப்பதாகவும் பதிவு செய்தபோது நெருக்கடியான சூழலையும் AISGEF கடந்து போகும் உற்சாகத்தை தரும் என்ற நம்பிக்கை பிறந்தது.

காஷ்மீரில் அம்மாநில அரசு கலைக்கப்பட்ட நிலையில், உறுப்பினராக்குவதும், கட்டிட நிதி வசூலிலும் சவால்கள் உள்ளதை சுட்டிக்காட்டி பேசியதும், நாங்கள் எந்த நாடு? இந்தியா? பாகிஸ்தானா? மிகவும் எம்மாநில மக்கள் பாதுகாப்பற்ற சூழலில் உள்ளார்கள் என்று பதிவு செய்தபோது, இப்படிப்பட்ட சூழலிலும் தேசிய செயற்குழுவில் அம்மாநிலம் தொடர்ச்சியான பங்களிப்பை தருவது மேலும் வலு சேர்ப்பதாக இருந்தது.

தேசிய செயற்குழுவை நடத்திக் கொண்டிருக்கும் கர்நாடகா மகிளா மாநில சம்மேளனத்தின் சார்பாக பங்கேற்று பேசும்போது, அம்மாநிலத்தில் ஊதிய மாற்றம் அமுல்படுத்தாத நிலையும், பேப்பர் பயன்படுத்தாத அலுவலகங்களாக மாற்றியிருப்பதையும், வெளி முகமை மூலம் ஊழியர்கள் நியமனம், புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்யும் போராட்டமும் தொடர வேண்டியும், ரத்து செய்ய AISGEF முடிவெடுக்கவும் வலியுறுத்தி பேசப்பட்டது.

கேரளாவில் வரலாறு காணாத வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சூழலிலும், செப்டம்பர் 5 பேரணியில் குறுகிய காலத்தில் நூற்றுக்கணக்கான கேரள அரசு ஊழியர்கள், டெல்லி பேரணியில் பங்கேற்றதையும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 23 லட்சம் ரூபாய் நிவாரண தொகையாக வழங்கியதையும், நிவாரண பொருட்கள் வழங்கியதையும், பல மாநிலங்கள் உதவிக்கரம் நீட்டியதையும் தற்போது "சபரிமலைக்கு பெண்கள் செல்வதை" நீதிமன்ற நடவடிக்கையை பாஜக கையிலெடுத்து அரசியலாக்குவதையும் அம்மாநில அரசு ஊழியர்கள் அனைவரும் மாத ஊதியத்தை வெள்ள நிவாரண நிதிக்கு வழங்கி பெருமை சேர்த்திருப்பதையும், அம்மாநிலத்தில் "லைப் மிஷின்" திட்டத்தின் மூலம் வீடற்றவர்களுக்கு 580 கோடியில் 54,036 வீடுகள் புனரமைத்து குறுகிய காலத்தில் கொடுத்திருப்பதையும் இந்த நடவடிக்கை தொடர்கிறது என்றும், ஆத்ராம் மிஷின் மூலம் 155 குடும்ப மருத்துவ முகாம் தொடங்கியுள்ளதையும் கூடுதலாக இந்த வருடம் 500 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தற்சமயத் திற்கேற்றவாறு நிலையங்களாக மாற்றி மக்களுக்கு முழு சுகாதார சேவையை உறுதிபடுத்தி இருப்பதையும், கேரள மாநிலத்தில் சிவில் சர்வீஸ்

மூலம் அரசு 15,000 புதிய பணியிடங்களை உருவாக்கியுள்ளதையும், ஏற்கனவே 80,000 பணியிடங்கள் நிரப்பபட்டுள்ளதையும் வரலாற்று சாதனையாக புதிய பென்ஷன் திட்டம் ரத்து செய்வது சம்பந்தமாக அரசு மூன்று நபர் குழு ஓய்வு பெற்ற நீதிபதி ஸ்ரீசதீஷ் சந்திரா பாபு தலைமையில் அமைக்கப்பட்டு விரைவில் பரிசீலிக்க வாய்ப்புள்ளது என்பதையும், கேரளாவில் 2012-ல் உம்மன்சாண்டி முதல்வர் காலத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் 5 நாள் வீரம் செறிந்த போராட்டத்தின் வெற்றியையும் அம்மாநில பொதுச் செயலாளர் மாதேவ் குட்டியால் வைக்கப்பட்டபோது, நாட்டிற்கே முன்னுதாரணமாக அரசையும், போராட்டத்தின் மூலமே உரிமைகளை நிலைநாட்ட முடியும் என்ற எழுச்சியை உண்டாக்குவதாகவும்,

“போராடாமல் பெற்றதுமில்லை
போராடி தோற்றதுமில்லை”

என்ற முன்னோர்களின் தியாகமே நினைவுக்கு வந்தது.

தேசிய பொதுச் செயலாளரின் தொகுப்புரையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களான எதிர்வரும் டிசம்பர் 29, 30 ஆகிய தேதிகளில் மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் நடைபெறும் மகளிர் மாநாட்டை வெற்றியடையச் செய்யவும், நமது மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட தோழியர்கள் முழுமையாக பங்கேற்க உத்திரவாதத்தையும் AISGEF-க்கு வழங்க வேண்டியதையும் இம்மாநாடு தீர்மானிக்கும் சக்தியாக விளங்க வேண்டியுள்ளது.

நாடாளுமன்ற தேர்தலை 2019-ல் சந்திக்கும் மோடி அரசுக்கு தகுந்த பாடத்தை புகட்டும் வகையில் “மார்ச் 8” பெண்கள் தினத்தை நாடு முழுவதும் போராட்ட இயக்கமாக பெண்களின் உரிமைகளை நிலைநாட்டும் கோஷத்தை முன்னெடுப்போம்.

தோழர்களே,

கடந்தகால சாதனைகளை சோதனைகள் மூலமே வென்று காட்டியுள்ளோம். தற்போது நாம் பெறும் சலுகைகள் அனைத்தும் அரசின் கருணையினாலும், காருண்யத்ததாலும் பெறப்பட்டவை அல்ல. இடைவிடாத நமது போராட்டங்களின் மூலமே அரசின் கரங்களிலிருந்து வலுக்கட்டாயமாக பறிக்கப்பட்டவைதான் என்ற நமது சங்கத்தின் ஸ்தாபக தலைவர் எம்.ஆர்.அப்பனின் சொற்களை நெஞ்சில் இறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவோம். ◣

# தமிழக அரசின் 56 அரசாணை எரிப்புப் போராட்டம்

## நாகை

இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் அரசாணை 56ஐ தீயிட்டு கொளுத்தும் போராட்டம் நாகை அவுரித்திடலில் 15-11-18 அன்று மாலை மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர்ராஜன் எழுச்சியுரையாற்றினார். நாகை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரையாற்றினார். வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் து.இளவரசன், அரசு ஊழியர் சங்க நாகை வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன், செயலாளர் எம்.தமிழ்வாணன், ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சி.கிருஷ்ணமூர்த்தி, மாவட்டப் பொருளாளர் பி.ஆசைத்தம்பி, நாகை வட்டச் செயலாளர் எம்.பி.குணசேகரன், சாலைப் பணியாளர் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.கணேசன், சத்துணவு ஊழியர் சங்கத்தின் கே.ராஜு, தனியார் கல்லூரி அலுவலர் சங்கத் தலைவர் எஸ்.ராஜேந்திரன் உள்ளிட்ட அனைவரும் அரசு ஆணை எண் 56-ன் நகலை தீயிட்டுக் கொளுத்தினர். இறுதியாக மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றியுரையாற்றினார்.

## வடசென்னை

அரசாணை எண்.56ஐ தீயிட்டுக் கொளுத்தும் போராட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்டத் தலைவர் ம.அந்தோணி சாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் டானியல் சத்யராஜ் வரவேற்றார். மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி கோரிக்கைகளை விளக்கி பேசினார். பொதுச் செயலாளர் மு.அன்பரசு சிறப்புரையாற்றி துவக்கி வைத்தார். நிறைவாக டி.ஏழுமலை நன்றி கூறினார். இதில் பங்கேற்ற அனைவரும் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். ◣

## அரசு ஊழியர்கள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் கஜா புயல் நிவாரண நிதிக்கு ஒரு நாள் ஊதியம் பிடித்தம் செய்ய அரசாணை வெளியீடு

**ABSTRACT**

Natural calamity – Cyclonic storm "GAJA"– Willingness to contribute one day's salary to the Chief Minister's Public Relief Fund towards relief and rehabilitation measures in the affected Districts - Representations received from Service Associations - Accepted - Order Issued.

---

**PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (K) DEPARTMENT**

G.O.(Ms) No.159

Date: 26.11.2018
விளம்பி, கார்த்திகை – 10
திருவள்ளுவர் ஆண்டு 2049.

Read:

**ORDER:**

The recent cyclonic storm "GAJA" has caused extensive damage of infrastructure, trees, crops in thousands of hectares, lakhs of huts and houses, etc., besides loss of lives in various districts of the State like, Nagapattinam, Tiruvarur, Thanjavur, Pudukottai, etc.,

2. Some of the service associations of Tamil Nadu Government Employees and Teachers have submitted representations expressing their willingness to contribute one day's salary of the Government employees to the Chief Minister's Public Relief Fund towards the relief and rehabilitation measures being taken in the affected districts.

3. The Government have decided to accept their request and direct that the voluntary contributions of one day's salary of the Government employees and Teachers to the "Chief Minister's Public Relief Fund" towards the relief and rehabilitation measures being taken in the Districts of Tamil Nadu, affected due to cyclonic storm "GAJA", be deducted from their pay bill for the month of November or December 2018.

The following procedures be followed to facilitate the contributions made by the Government employees/ Teachers:-

i. Any employee willing to voluntarily contribute One day's salary to the "Chief Minister's Public Relief Fund" towards the relief and rehabilitation measures being taken in the Districts of Tamil Nadu, affected due to cyclonic storm "GAJA" shall give his/her consent in writing to the concerned Drawing and Disbursing Officers.

ii. The Drawing and Disbursing Officers shall make use of the provisions in the Web Pay roll application for calculating one day's / more than one day's salary in the pay bill for the month of November or December 2018, as the case may be. This amount shall be deducted on the basis of gross amount of salary for the month of November or December 2018 and

credited directly to the **"Chief Minister's Public Relief Fund"** Savings Bank account maintained at Indian Overseas Bank, Secretariat Branch, Chennai-9 (SB A/c No.1172010000 00070 MICR Code: 600020061, IFS Code: IOBA0001172, CMPRF PAN No.AAAGC0038F) on the due date of disbursement of salary. The Drawing and Disbursing Officers shall inform the District level Officers and Heads of Department on the ECS mode of deduction from the monthly pay bill and the amount credited to the Chief Minister's Public Relief Fund account along with list of employees from whose salaries the contributions are deducted".

iii. If any of the Offices do not have ECS mode of payment for salary of the staff members, the Pay Drawing and Disbursing Officers shall obtain a consolidated crossed Cheque or Demand Draft in favour of the "Chief Minister's Public Relief Fund". The Cheque / Demand Draft along with a statement of Names, Designation and the name of the office of the contributing employees shall be sent to the District level Officer in the Department, who shall be the Nodal officer for that District in that Department nominated by the concerned Heads of Department. The Nodal Officer, in turn, will send the cheques so received along with the Statement of particulars to the Deputy Secretary to Government and Treasurer, Chief Minister's Public Relief Fund, Finance Department, Secretariat, Chennai-9, under intimation to the concerned Heads of Department. The Heads of Department will monitor the collection and forwarding of contributions along with the Statements to the Chief Minister's Public Relief Fund. Heads of Department shall nominate an officer of his Department in each District as Nodal Officer.

iv. In respect of Offices of Heads of Department and the departments of Secretariat, the same procedure shall be followed and the Drawing and Disbursing Officer shall send the ECS / Cheques details and statement of particulars direct to the Chief Minister's Public Relief Fund.

v. In respect of Self-drawing officers, the same procedure outlined above shall be followed.

vi. The drawing and disbursing officer shall allow tax exemption to the extent of 100% on the contribution to Chief Minister's Public Relief Fund based on these orders. Employees who have contributed to Chief Minister's Public Relief Fund other than salary deduction may get receipt for such contribution from Chief Minister's Public Relief Fund, to avail tax exemption.

vii. Any employee willing to contribute more than one day's salary may also be permitted to do so as per the willingness given following the procedure under item (i) above.

viii. These orders may be applied mutatis mutandis to all employees of Local Bodies, Universities, Board and Corporations, Aided Educational Institutions and other institutions receiving grants from the Government and also to the employees drawing Consolidated Pay, based on the willingness obtained from the employees.

4. The Drawing and Disbursing Officers shall ensure that the contributions are made purely voluntarily and the above procedures have been evolved only in order to facilitate the request made by the Service Associations of Government employees and Teachers for contribution to the Chief Minister's Public Relief Fund.

5. This order issues with the concurrence of the Finance Department vide its U.O.No.60466/CMPRF/2018, dated 26.11.2018.

# பணிஓய்வு பாராட்டு விழா



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மன்னார்குடி வட்டத் தலைவர் கே.சிவசுப்ரமணியன் அவர்களது பணி ஓய்வு பாராட்டு விழாவில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநில துணைத் தலைவர் கே.அகோரம் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். உடன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ஜி.பைரவநாதன் மற்றும் மாவட்டச் செயலாளர் வெ.சோமசுந்தரம் ஆகிய நிர்வாகிகள்.



தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் சார்பில் கடந்த 15.11.2018 அன்று நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற ஊழியர்கள்

# ஆகச் சிறந்த காப்பி!!

சீதனமாய் வந்த பசுவின் கறந்த பாலில்
பாசமுடன் அன்னை தந்த அருமை காப்பி!

மருமகனின் மனமறிந்து மகிழ்வுடனே
மாமியார் தந்த மகத்தான காப்பி!

நண்பன் ஹரி வீட்டு
மனம் கமழும் அய்யர் காப்பி!

நாவெல்லாம் சுண்டி இழுக்கும்
நல்துணயாள் நல்கிடும் நல்ல காப்பி!

அப்பாவுக்கு அன்பாய் ஆசையாய்
குழந்தைகள் கொடுத்திடும் பாசக் காப்பி!

செல்லும் நேரமெல்லாம் சிறிதும் நோகாமல்
அண்ணனுக்கு உடன் பிறப்புக்கள் வழங்கும் காப்பி!

நினைத்தாலே நாவில் உமிழ் நீரை உவகையுடன்
கொண்டுவரும் எத்தனை விதமான காப்பி!

வாழ்வில் நான் கண்டிட்ட காப்பிகளில்...

வளர்த்த கால்நடைகளை இழந்து...
வாழ்வித்த மரங்களை இழந்து..

மழையிலும் வெயிலிலும் மாறாமல் காத்திட்ட
இல்லத்தில் உள்ளவை அத்துனையும் இழந்து...

" கஜா புயல் " கோரத்தாணடவமாடிய
ஓரிரவில் ஒளியிழந்த வேதையின்
வேதனையை பங்குபோட...

மக்களை நோக்கிய பயணத்தை
மகிழ்வாய் கடைபிடிக்கும்
மகத்தான சங்கத் தலைவர்களுடன்...

மனதின் வலியை மறைதுக்கொண்டு
மாறாத அன்புகொண்ட மறைக்காடு
மக்களை சந்திக்க சென்றவேளை...

அத்துனையும் இழந்த எம் ஆருயிர் தோழன்
எம்.ஜி.இராமமூர்த்தி இல்லத்தில்...

உள்ளத்து அன்புடனே உவகையாய் தந்திட்ட....
உயர்வான காப்பியது...

உலகில் யான் பருகிட்ட காப்பிகளில்
ஆகச் சிறந்த காப்பி
அதுவன்றி வேறு இல்லை.

- **நாகை ஏ...ட்டி...ஏ**

# நாகை மாவட்டம் புயல் பாதிப்பு நிவாரணப் பணிகள்

கஜா புயலால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ள வேதாரண்யம் பகுதியில் அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல், மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன், மாவட்டப் பொருளாளர் பா.ராணி, மாவட்ட இணைச் செயலாளர் து.இளவரசன், முன்னாள் மாநில துணைத் தலைவர் சு.சிவகுமார் ஆகியோர் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பாதிக்கப் பட்டுள்ள வேதாரண்யம் வட்டச் செயலாளர் வி.கணேசன், முன்னாள் வட்டச் செயலாளர் எம்.ஜி.இராமமூர்த்தி உள்ளிட்டோரின் வீடுகளுக்கு சென்றதோடு அப்பகுதி மக்களையும் சந்தித்து ஆறுதல் தெரிவித்தோம். அப்பகுதி மக்களுக்கு ரூ.10,000/= மதிப்பிலான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

பின்னர் வேதாரண்யம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று அங்கு தொடர்ந்து மக்கள் பணியாற்றி வரும் அலுவலக வட்டாட்சியர் மற்றும் ஊழியர்களை சந்தித்து உரையாடினோம்.

வரலாறு காணாத வகையில் பாதிப்பிற்கு உள்ளான பகுதியாக இப்பகுதி காட்சியளிக் கின்றது. கான்கிரீட் வீடுகளைத் தவிர்த்து அனைத்து வீடுகளில் வசித்தோரும் வசிக்க வீடின்றி தவிப்பதை காண்பதும், தம் வாழ்வாதாரத்தின் பெரும் சொத்தாக வளர்த்த மரங்களையும் ஆடு, மாடுகளையும் இழந்த தவிப்பு மனதை மிகவும் துன்பப்படுத்துவதாக இருந்தது.

ஊருக்கு உணவளிக்கும் உழவர்கள் வீட்டில் உலை வைக்க வாடி நிற்பது கண்டு கலங்காதோர் யாரும் இருக்க இயலாது. மின்வாரியப் பணியாளர்கள் கொட்டும் மழையிலும் தம் பணியை நிறைவேற்றிக்கொண்டிருந்தனர்.

புயல் நிவாரண கணக்கெடுப்பு பணி சரியாக துவங்காத நிலை. பத்துக்கும் பேற்பட்ட கிராம நிர்வாக அலுவலர் பணியிடம் இல்லாத நிலை. இரவு பகலாக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை உள்ளிட்டு அனைத்துத் துறை ஊழியர்களும் மீட்புப் பணியை தம் வீடு மறந்து சொந்த நலன் துறந்து சரியான உணவு, முறையான ஓய்வு இல்லாமல் பணி செய்து வருகின்றனர்.

அரசு இயந்திரம் இன்னும் நன்கு செயல்பட உரிய வழிகளை செய்திட வேண்டிய நேரமிது.

வரலாறு காணாத இழப்பை சந்தித்துள்ள டெல்டா பகுதி மக்களுக்கு அனைத்துப் பகுதி மக்களும் உரிய வகையில் உதவிட வேண்டுமென தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்ட மையம் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்.

***

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கஜா புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்திடவும், கணக்கெடுத்து உரிய நிவாரணம் வழங்கிடவும் வருவாய்த் துறை, வளர்ச்சித் துறை, நெடுஞ் சாலைத் துறை, பொது சுகாதாரத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த ஊழியர்கள் இரவு பகல் பாராமல் தொடர்ந்து களப்பணி மேற்கொண்டு வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக வருவாய்த்துறை மற்றும் வளர்ச்சித் துறை ஊழியர்கள் பம்பரம் போல் சழன்று பணியாற்றி வருகின்றனர். இதர மாவட்டங்களிலிருந்தும் வந்து தங்கி பணியாற்றிவரும் நிலையில் சில விஷமிகளும், அரசியல் பிரமுகர்களும் அவர்களது சுய லாபத்திற்காக முறையாக நிவாரண பணியை செய்யவிடாமல் தொடர்ந்து பிரச்சினை செய்தும், களப்பணி மேற்கொள்ளும் ஊழியர்களை தாக்கியும், கொலை மிரட்டல் விடுத்தும் வருகின்றனர்.

கடந்த 21.11.2018 இரவு வேதாரண்யம் வட்டம் பெரிய குத்தகை கிராமத்திற்கு உணவு சமைப்ப தற்காக எடுத்துச் சென்ற மளிகை பொருட்களை கோயில்பத்து கிராமத்தில் போகவிடாமல் தடுத்து நிறுத்தி மளிகை பொருட்களை அபகரித்துள்ளனர். அதை கேட்க சென்ற வேதாரண்யம் வட்ட பொறுப்பு வட்டாட்சியர் எம்.ஸ்ரீதர் மற்றும் அவருடன் சென்ற ஊழியர்களை தாக்கியதோடு மட்டுமல்லாமல் அரசு வாகனத்தை அடித்து நொறுக்கியுள்ளனர். அவர்களை உடன் கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேதாரண்யம் வட்டாட்சியரால் வேட்டைக் காரனிருப்பு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில் முக்கிய குற்றவாளி கோவில்பத்து கிராமத்தை சேர்ந்த ஆர்.கதிர்வேல் என்பவர் இதுநாள் வரை கைது செய்யப்படவில்லை.

அதேபோல் கீழ்வேளூர் வட்டத்தில் புயல் பாதுகாப்பு மையத்தில் தங்கியிருந்த பாதிக்கப் பட்ட மக்களுக்கு உணவு தயார் செய்து வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளரை அஇஅதிமுக கீழ்வேளூர் ஒன்றிய செயலாளர் சிவா தாக்கியுள் ளார். இதுகுறித்து காவல் நிலையத்தில் அந்த வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், கடந்த 22.11.2018 அன்று மாலை கீழ்வேளூர் வட்ட அலுவலகத்தில் கூட்டாளிகளுடன் அத்து மீறி நுழைந்து அரசு பணியை செய்ய விடாமல் ஊழியர்களை தரக்குரைவாக பேசி கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

சிவா மற்றும் அவரது கூட்டாளிகள் மீது வழக்கு பதிவு செய்து கைது நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என வட்டாட்சியரால் கீழ்வேளுர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும், உயர் அலுவலர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கம் சார்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியும், உயர் அலுவலர்கள் உடன் நடவடிக்கை எடுப்பதாக உத்திரவாதம் அளித்தும் காவல் துறை இதுநாள் வரை குற்றவாளிகளை கைது செய்யவில்லை. இதனை கண்டித்து 29.11.18 அன்று வருவாய்த் துறை அலுவலர் சங்கம் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட துணைத் தலைவர் ஆர்.முருகானந்தம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. மாவட்டச் செயலாளர் து.இளவரசன் விளக்கவுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல், மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள். மாநிலச் செயலாளர் எல்.பிரேம் சந்திரன் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் பிச்சைபிள்ளை நன்றி கூறினார்.

## கஜாவே இனியொரு முறை பிறக்காதே

“இல்லை யென்று மறுக்காத
இளகிய மனம் கொண்டோர்
இயன்றதை அள்ளி கொடுக்க
விடுமுறை நாளாயினும்
காலில் சக்கரம் மாட்டி
கஜாவின் துயர் துடைக்க
சேகரிப்பு பொருளோ மூன்றுடன்
சேதாரமின்றி பத்திரமாய்
புதுகையிலே ஒப்படைப்பு
வியந்து பாராட்டிய தருணம்...
கஜாவே இனி பிறக்காதே”

என சபித்து புறப்பட்டோம்... பாதிப்படைந்த புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா வில் உள்ள கீழாத்தூர், வடகாடு, மாங்காடு கிராமங்கள் நோக்கி. கிருஷ்ணகிரி மாவட்ட தோழர்கள் பயணிக்க உடன் புதுவை மாவட்ட நிர்வாகிகள் வழிகாட்ட வழிநெடுக கஜாவின் கோரத் தாண்டவத்தின் அடையாளம் நெஞ்சை பிளந்தது. ஐம்பது ஆண்டுகளான புளிய மரங்கள், பலம் தந்த பலா மரங்கள், வான் உயர நிமிர்ந்து நின்ற யூகலிப்டஸ், ஏக்கர் கணக்கில் சாய்ந்து கிடந்த தென்னை மரங்கள், பச்சிளம் தாய் போல் காட்சியளித்த வாழைத் தோட்டங்கள் எல்லாமும் மண்ணில் சாய்ந்து கிடப்பதை கண்டு திக்கிற்று நின்றோம்.

காலேஜ்ல புள்ள படிக்குது, ஒரு லட்சம் கடன் வாங்கி வாழ கட்ட 200 நட்டேன், பத்து மாசம் ஆச்சய்யா, தார் வித்தா கல்யாணம் பண்ண லாம்னு இருந்தேன், எல்லாம் மண்ணா போச்சு. வாங்குன கடனுக்கு வட்டி கேட்டு மண்டி ஓனரு தினம் வரும்போது... நாங்க வாழ கட்ட கிட்ட போய் அழுகுறோம்.யாரும் வந்து பாக்கல... ஏதாவது செய்யுங்கய்யா என கண்ணீர் மல்க கீழாத்தூர் கணேசனும் மனைவியும் சொன்ன போது... கணத்தை நெஞ்சில் சுமந்து ஆறுதல் சொன்ன தருணம். நிர்க்கதியான கணேசன் போன்ற விவசாயிகளுக்கு உடனே நியாயமான “நிவாரணமே” தற்கொலையை தடுக்கும் என்பதை அரசுகள் புரிய வேண்டும் என்பதை உணர்ந்தோம்.

வடகாட்டில் வலியுறுத்தி அழைத்த அன்பான வர்களின் அழைப்பை ஏற்று மதிய உணவு முகாம் மக்களுடன் என்று உட்கார.. தலைவாழை போட்டு பந்தி வைக்கும் ஊரில் பேப்பர் இலை போட வைத்த சோகத்தை கஜா உருவாக்கி யிருந்தது.

கிருஷ்ணகிரி மாவட்ட, வட்ட, முன்னணி தோழர்கள் இடைவிடாது உள்ளார்ந்த மனித நேயத்தோடு 42 வகையான நிவாரண பொருட் களின் மதிப்பு 2 லட்சத்திற்கு தாண்டியிருப்பின் இவையெல்லாம் அம்மக்களின் துயர் துடைப்பில் ஒரு மழைத் துளியே என எண்ணி புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகிகளிடம் பொறுப்பாக ஒப்படைத்தாலும் எங்கள் மனமெல்லாம் டெல்டாவையேத்தான் சுற்றி வருகிறது.

- **சி.பி.ஜெயராமன்**, கிருஷ்ணகிரி

**15**/11/2018 அன்று காலை முதல் மாநிலம் முழுவதும் தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுனர் சங்கத்தின் சார்பில் இரண்டு அம்சக் கோரிக்கைகளுக்காக கவன ஈர்ப்பு ஆர்ப்பாட் டங்களை எழுச்சியுடன் நடத்தினோம். அப்போது நமக்குத் தெரியவில்லை. அன்று மாலை அரசு ஊழியர் சங்க அறிவிப்பின்படி எல்லா மாவட்டங்களிலும் நமது எதிர்கால சந்ததியின் வயிற்றிலடிக்கும் அரசாணை 56 நகலெரிப்புப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தினோம். பலரும் கைதானோம். அப்போதும் நமக்குத் தெரியவில்லை. நமது வயிற்றுக்கு உணவிட்டுக் கொண்டிருக்கும், தமிழகத்தின் நெற்களஞ்சியம் இப்படி துடைத்தழிக்கப்படும் என்றோ, நமது நண்பர்களின் உறவுகளின் கதறலால் நம் காதுகள் உணர்விழக்குமென்றோ அப்போது நமக்குத் தெரியவில்லை.

அய்யோ எத்தனை கோரமான புயலின் தாண்டவம். 16/11/18 அன்று விடியும் முன்பே, எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கையில் கஜா புயல் தன் கோரத் தாண்டவத்தை ஆடித் தீர்த்தது. .தன் கருணையற்றக் கரங்களால், அதன் சக்திக்குட்பட்ட வீடுகள் மரங்கள் கால்நடைகள் என எல்லாவற்றையும் வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டுப் போனது. முழுமையாக மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பல்லாயிரக்கணக்கான உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது. அதே சமயத்தில், மின்சாரம் தடைப்பட்டதால் சொந்த மாவட்டத் தில் என்ன நடந்திருக்கிறது என்பதை அவர்க ளாலேயே அறிந்து கொள்ள முடியவில்லை. அறிந்து கொள்ள முடிந்த போது, எங்கெங்கும் சேதங்கள். தஞ்சையின் ஒரத்தநாடு, பட்டுக் கோட்டை, பேராவூரணி, அதிராம்பட்டினம், முத்துப்பேட்டை போன்ற பகுதிகளுக்கு பலத்த சேதம். போலவே புதுக்கோட்டை, ஆலங்குடி, கறம்பக்குடி, திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, கூத்தாநல்லூர் உள்ளிட்ட இன்னும் உள்பகுதிகள், நாகை, வேதாரண்யம், வேளாங்கண்ணி போன்ற பகுதிகள், மீனவக் கிராமங்கள் என்று டெல்டாவை கடும் பாதிப்புக் குள்ளாக்கியிருக்கிறது புயல். பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதியில் தென்னை விவசாயம். அந்தப் பகுதியின் தேங்காய்கள் ஏற்றுமதிப் புகழ் வாய்ந்தவை. கிட்டத்தட்ட 30 லட்சம் தென்னைகள் முறிந்து வீழ்ந்திருக்கின்றன. அரசு ஆயிரக்கணக்கான தென்னை என்று சர்வ சாதாரணமாக சொல்கிறது. தென்னையை நம்பியே வாழ்ந்து கொண்டிருந்த அந்த மக்கள் இனி வாழ்ந்தென்ன பயன் என்று கண்ணீர் வடிக்கி றார்கள்.

# கண்ணீரை செந்நீராக்கிய... கஜா

ஒரு தென்னை வளர்ந்து பயன் தர 7லிருந்து 8 வருடமாகும். இனி அவர்கள் வாழ்வு எதை நம்பி நடக்கும். மரங்களிலும், தொழுவத் திலும் கட்டி வைக்கப்பட்டிருந்த கால்நடைகள் புயலின் மிரட்சியிலும், வீழ்ந்த மரங்களுக்குக் கிடையிலும் வீழ்ந்து கிடக்கும் காட்சிகள் நம் மனத்தை கிழிக்கிறது. வீடுகள் முற்றாக அழிந்தவர்கள் ஒரு புறம், வீடுகளின் கூரைகள் பறந்து போய் வீட்டின் மொத்த பொருட்களையும் இழந்தவர்கள் ஒரு புறம், இவற்றுக்கு நடுவே நனைந்து, கிழிந்து போன பாடப்புத்தகங்களைக் கண்டு அழும் பிஞ்சுகள்.

உடைந்து வீழ்ந்த மின்கம்பங்கள் ஆயிரக்கணக் கில். மின்மாற்றிகள் வேரோடு பிடுங்கி வீழ்த்தப்பட்டிருக்கின்றன. திருத்துறைப்பூண்டி உள்ளிட்டப் பகுதிகளில் முந்திரித்தோப்புகள் காணாமல் போய்விட்டன. கடல் சார்ந்து வாழ்ந்த நாகையின் மீனவப் பகுதிகளின் துயர் சொல்ல வியலாதது. வானம் பார்த்த பூமியாக கருதப்பட்ட புதுக்கோட்டை எதிர்கொண்டிருக்கும் பேரிழப்பு ஒரு தலைமுறையையே நிலைகுலையச் செய்திருக்கிறது.

இயற்கைப் பேரிடர்கள் இயல்பு தானே என சில அறிவுஜீவிகள் சொல்லக்கூடும். ஆனால் இயல்பான இயற்கைப்பேரிடரை எதிர்கொள்ள நாம் என்ன மாதிரியான வசதிகளை வைத்திருக் கிறோம் என எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. இத்தனைப் பெரிய பேரிழப்பு ஏற்பட்ட பிறகு, இதோ இந்த கட்டுரை எழுதப்படும் போது 12 நாட்களைக் கடந்து விட்டோம். ஆனால், நிவாரணப்பணிகள் எந்த அளவுக்கு நடந்தேறி யுள்ளது என்பதை எண்ணிப்பார்க்கையில் வேதனையே மிஞ்சுகிறது.

ஊருக்கெல்லாம் சோறு போட்ட டெல்டாவின் மக்கள் ஒரு வேளைச் சோற்றுக்காக, உடுத்தும் துணிக்காக, மாதாந்திர உதிரப்போக்கை எதிர்கொள்ளும் ஒரு பாக்கெட் நாப்கினுக்காக, அழுகின்ற குழந்தையின் பசியாற்றும் ஒரு வாய் பாலுக்காக சாலைகளின் ஓரங்களில் நிவாரணப் பொருட்களை கொண்டு யாராவது வருவார்களா என்று காத்துக்கிடக்கும் சோகம் இன்னமும் தொடர்கிறது. தன்னார்வலர்கள் பலரும் குழுவாக ஒருங்கிணைந்து பணிகளைச் செய்கின்றனர். இன்னமும் உதவிகள் சென்று சேராத கிராமங் களும், பறந்து விழுந்த வீட்டின் கூரையை மூடிக் கொள்ளக் கூட முடியாத மக்களும் இருக்கின் றனர். தார்ப்பாலின் ஷீட்டுகளும், சோலார் விளக்குகளும் என்று தன்னார்வலர்கள் உதவி வருகிறார்கள்.

திருத்துறைப்பூண்டி தோழர் மணிவண்ண னிடம் பேசியபோது அவர் கூறிய ஒரு வரி இன்னமும் மனதில் ஓடியபடி இருக்கிறது . 'நாமெல்லாம் அரசு ஊழியர்கள், ஏதோ அடுத்த மாதம் ஊதியமாக ஒரு தொகை வரும். அன்றாட செலவுகளையாவது செய்து மீண்டு கொள்ளலாம், ஆனால் இந்த மரங்களையும், தோப்புகளையும், கால்நடைகளையும் நம்பி வாழ்ந்தவர்களின் கதி என்ன? எப்போது அவர்களால் மீள முடியும்?!' முகத்திலறையும் உண்மை. எப்படி மீளும் டெல்டா, எப்போது மீளும்? இன்னமும் மின்சாரம் திரும்பக்கிடைக்காத பகுதிகள், இன்னமும் மரங்கள் அகற்றப்படாத கிராமங்கள். எப்போது மாறப்போகின்றன..!!

நாம் என்ன செய்ய முடியும் என்று யோசிக்க வேண்டிய நேரமிது. இந்த இக்கட்டான சூழலில் நாம் அத்தனைப் பேரும் நம்மால் இயன்ற நிதியளித்து சில நூறு குடும்பங்களுக்காவது உதவ முடிந்தால் அது கருணையின் சாரம் அல்லவா!!

"கண்கள் கசியும், கரங்கள் நீளும்.. "இது இன்னமும் நம்பிக்கை அற்றுப்போகாத ஒரு டெல்டாவாசியின் கனவு...

- **ஹேமலதா**, தஞ்சாவூர்

# கரூரில் கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை டீன் மருத்துவர் ரோசிவெண்ணிலா அவர்களின் ஊழியர் விரோத மற்றும் பழிவாங்கும் போக்கினைக் கண்டித்தும், பழி வாங்கும் நோக்கில் அலுவலக கண்காணிப்பாளர் சி.கண்ணன் மற்றும் சாமுவேல் சத்தியகுமார் ஆகியோருக்கு வழங்கப்பட்ட பணியிட மாறுதல் உத்தரவினை ரத்து செய்திடக் கோரியும், சர்வாதிகார போக்குடன் தொடர்ந்து செயல்பட்டு வரும் மரு.ரோசிவெண்ணிலாவை பணியிட மாறுதல் செய்திடக் கோரியும் 29.11.2018 அன்று கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.



இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசு ஊழியர் சங்க பொதுச் செயலாளர் மு.அன்பரசு, அனைத்து மருந்தாளுநர் சங்கத் தலைவர் மு.சுப்பிரமணியன், மருத்துவத் துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் சீ.பிரபுராம், அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் கெ.சக்திவேல், அரசு நர்சுகள் சங்க மாநில துணைத் தலைவர் மு.நல்லம்மா, அரசு ஆய்வுக்கூட நுட்புநர்கள் சங்க மாநிலச் செயலாளர் செல்வராணி உள்ளிட்ட தோழமை சங்க நிர்வாகிகள் கண்டன உரையாற்றினர். இதில் தோழமை சங்கம் மற்றும் துறைவாரி சங்க நிர்வாகிகள் பங்கேற்று உரையாற்றினர்.

# நவீன தாராளமயக் கொள்கையின் நீட்சியே தேசிய மருத்துவ ஆணைய மசோதா

கே.எம்.எஸ்.

இந்திய தேசத்தின் வளர்ச்சிக்காக உருவாக்கப் பட்ட மத்திய திட்டக் குழு பாஜக அரசால் கலைக்கப்பட்டு தற்போது நிதி ஆயோக் என்ற பேரில் சுருக்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகளில் ஒருங்கிணைந்த செயல்பாட்டை இது முடக்கிவிட்டது.

இதன் தொடர்ச்சியாகத்தான் பாஜக அரசு மருத்துவத்துறையில் மக்கள் நலனுக்காக 1956இல் உருவாக்கப்பட்ட இந்திய மருத்துவ கவுன்சில் என்பதை தேசிய மருத்துவ ஆணையம் என்று மாற்ற நாடாளுமன்றத்தில் மசோதவை தாக்கல் செய்து சட்டமாக்க முயற்சித்து வருகிறது.

இந்திய மருத்துவ கவுன்சிலின் பணிகள் இளநிலை மருத்துவ கல்வியின் தரத்தை ஒரே மாதிரி உருவாக்கல் மற்றும் பராமரித்தல் முதுநிலை மருத்துவ படிப்பை ஒழுங்கு படுத்துதல், உள்நாட்டு, வெளிநாட்டு மருத்துவ கல்விக்கு அங்கீகாரம் அளித்தல், அங்கீகரிக் கப்பட்ட மருத்துவ கல்வி, தகுதியுடைய மருத்துவர்கள் பதிவு செய்தல் ஆகியனவாகும். மருத்துவக் கல்வியை பொறுத்தமட்டில் அரசியல் சாசன பொதுப்பட்டியலில் இருக்கிறது. அப்படியென்றால் மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து ஆலோசித்து செயல்பட வேண்டும். ஆனால், தற்போதைய பாஜக அரசு இந்த நடைமுறைகளை பின்பற்ற தயாராக இல்லை. நீட் தேர்வு தானடித்த மூப்பாக முடிவுகளை மேற்கொண்டு வருகிறது.

நம் நாட்டில் 235 மருத்துவக் கல்லூரிகளும் அதில் 31,727 இடங்களும் உள்ளன. இதில் படித்து பட்டம் பெற்று பதிவு செய்துள்ள மருத்துவர்கள் இதுவரை 9.29 லட்சம் பேர். பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது குறைவான விகிதத்திலேயே நம் நாட்டில் மருத்துவர்கள் உள்ளனர். அது மட்டு மல்ல, செவிலியர்கள், மருத்துவ தொழில்நுட்ப ஊழியர்கள், படுக்கை வசதி, மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை, பேறுகால மரணம், சராசரி ஆயுட் காலம் என இவைகளிலும் மிகக் குறைந்த வளர்ச்சி விகிதத்தையே பெற்றுள்ளோம். இத்தகைய சூழலில்தான் இருக்கும் நிலைமைகளையும் மோசமாக்கும் நடவடிக்கையாக பெயர் மாற்றும் முயற்சி நடைபெற்று வருகிறது.

தற்போதைய இந்திய மருத்துவ கவுன்சிலில் 130 பேர் அங்கம் வகித்து வருகின்றனர். இதில் 23 விழுக்காட்டினர் மருத்துவ பல்கலைக்கழகங்களில் இருந்தும், 17 விழுக்காடு பதிவு பெற்ற மருத்துவர்களில் இருந்தும், 6 விழுக்காடு மத்திய அரசின் பரிந்துரைப்படியும் தேர்வு செய்யப்படு கிறார்கள். ஆனால், தேசிய மருத்துவ ஆணையத் திற்கு இருக்கும் இடங்கள் 25, இவற்றில் பாதிக்கும் மேற்பட்ட இடங்கள் பதவிவழி நியமிக்கப் பட்டவை. மீதமுள்ள இடங்களில் மத்திய அரசே ஆட்களை நியமிக்கும், பொதுப் பட்டியலில் உள்ள மருத்துவக் கல்வியை நிர்வகிக்கும் பொறுப்பில் மாநில அரசுகளுக்கு துளியும் பங்கு இல்லை. மாநில அரசுகளுக்கு உருவாக்கப் பட்டிருப்பது ஓர் ஆலோசனைக் குழு மட்டுமே. மாநில அரசுகளின் தேவைகள், குறைகள், ஆலோசனைகள் ஆகியவற்றை இந்தக் குழுவில் மட்டுமே முன்வைக்க முடியும். இதனை தேசிய மருத்துவ ஆணையம் எந்த அளவுக்கு எடுத்துக் கொள்ளும் என்று யாருக்கும் தெரியாது.

இந்த மசோதாவை உருவாக்கியது நிதி அயோக் அமைப்பு. 2016ஆம் ஆண்டிலேயே இந்த வரைவு மசோதாவை அது தயாரித்துவிட்டது. இந்திய திட்டக் குழு கலைக்கப்பட்டு நிதி அயோக் என்ற அமைப்பையே உருவாக்கியதே இத்தகைய செயல் திட்டங்களை நிறைவேற்றவே ஐஎம்எப், உலக வங்கி, உலக வர்த்தக அமைப்பு ஆகியவற்றின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப இந்திய கல்வி மருத்துவம், சுகாதாரம் போன்றவற்றை மாற்றி அமைப்பதே நிதி அயோக்கின் அடிப்படை பணி.

இந்த மசோதா மத்தியில் அதிகார குவியலை ஏற்படுத்தி கூட்டாட்சியை சீர்குலைப்பது. தனியார்மயத்தை மருத்துவக் கல்வியில் துரிதப்படுத்துவது, சமூக நீதியை குறைப்பது.

இம்மசோதாவில் பாதகமான இதர அம்சங்களாக இந்திய முழுவதும் உள்ள மருத்துவ கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் அரசு நிர்ணயித்த கட்டணங்கள்படி தீர்மானம் செய்யப்படுகிறது. புதிய ஆணையம் வந்துவிட்டால் நாற்பது விழுக்காடு இடங்களில்

மட்டுமே தமிழ்நாடு அரசு கட்டணங்களை தீர்மானிக்க இயலும். மத்திய, மாநில அரசுகள் கல்வி அளிக்கும் பொறுப்பிலிருந்து பின்வாங்கி தனியார் மருத்துவக் கல்லூரிகள் பல்கி பெருகும் இந்த காலக்கட்டத்தில் தனியாரின் லாப வேட்டைக்கு இது மிகவும் தோதாக அமையும். ஆங்கில மருந்துகள் எந்தவித பயிற்சியும் அற்றவர்கள் கையாளும் ஆபத்து வரும். மருத்துவம் பயின்ற பின்னர் மருத்துவம் செய்ய தனித்தேர்வு என்ற நடைமுறையை கொண்டுவர உள்ளது.

எனவே, மாநில அரசுகளை கலந்தாலோ சிக்காமல் இந்திய மருத்துவ கவுன்சிலை கலைத்து தேசிய மருத்துவ ஆணையம் உருவாக்க நாடாளுமன்றத்தில் சட்டமாக்கும் முயற்சிகள் தடுக்கப்பட்டாக வேண்டும். அனைத்து ஜனநாயக சக்திகளும், மாநில அரசுகளும் இணைந்து குரல் கொடுத்து "அனைவருக்கும் ஆரோக்கியம்" என்பதை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

## செயலற்ற அரசை அசைத்திடும் போர்! இணைந்து கொள் தோழியே!

*"டிசம்பர் 4" முதல் - கூடி*
*இணைந்த போரைப் பற்றி - நான்*
*விளக்கவே தேவையில்லை!*

*கண்ணை திறந்து*
*வெளி உலகை பார்த்தாலே*
*விளங்கிடும் உண்மை!*

*காண்பவைகள்*
*சமூக அநீதி மட்டுமல்ல - நம்*
*சமூகப் பாதுகாப்பை பெற்றிட - நாமும்*
*இணையும் போர் என்று!*

*அரசுப் பணியே பாதுகாப்பு என நம்பி - அரசிடம்*
*வாழ்க்கையை ஒப்படைத்த*
*அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள்*
*இன்று தெருவில்!*

*இருபத்தியோரு மாத நிலுவை பெற்று*
*கூவத்தூரில் கூத்தடித்தபோதெல்லாம்*
*வாழ்நாள் பென்சன் பெற்று*
*பாதுகாப்பாக திமிரில்! - கேட்டால்*
*ஸ்லீப்பர் செல்லாம்!*

*முப்பத்தைந்து ஆண்டுகளாய்*
*ஜெகன் மோகினிகளாக துறைக்கு உழைத்த*
*சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களை - அரசு*
*பணி ஓய்வு என்று அனுப்புகிறது.*

*அன்றிருந்து இன்று வரை உள்ள அரசும்*
*சாதிக்கிறது பல சுற்று பேச்சுவார்த்தையில்*
*மட்டும்!*

*பாதிக்கப்பட்ட ஊழியர்களோ*
*தான் பணி செய்த மையத்திலேயே*
*உடல் கூனி, நா கூசி - உயிர் வாழ*
*வேறு வழியின்றி - சோறு கேட்கும்*
*நடைபிணம்!*

*அரசு அன்றே கொல்லும்*
*தனியார்மயக் கொள்கைகள் நின்று கொல்லும்!*
*இரண்டையும் பார்க்கையில்*
*ஒன்றுபட்ட வர்க்கப் போராட்டத்தின்*
*ஒவ்வொரு அனுபவமும்*
*இந்த செயலற்ற அரசை*
*அசைத்திடச் சொல்லும்!*

*அதிகார வர்க்கத் தேள்களின் கொடுக்குக்கு*
*முழு நீள வாளாக சட்டங்கள்!*
*இளைஞர்களின் வாழ்வைப் பறிக்கும்*
*அரசாணையை*
*தட்டிக் கொடுக்க நீதிமன்ற சாத்தியங்கள்!*

*நீதிதேவதையின்*
*கண்கட்டை அவிழ்த்தால் - அங்கே*
*கார்ப்பரேட்டுகளின் திருட்டு முழிகள்!*
*ராமனுக்கு கோயில் கட்ட*
*சூலங்கள்! அதனை ஏந்துவோருக்கு*
*சிபிஎஸ் பணத்தை வாரிக் கொட்ட*
*துடைப்பங்கள்! நமது நாட்டையே*
*அமெரிக்க குப்பையாக்கி விட்டு*
*நாடகமாடும் தர்ப்பைகள்! - முற்றிலும்*
*முதலாளிகளுக்கு சாமரம் வீச மட்டுமே - நமது*
*ஊதிய பணம் பத்து சதம் பங்கு சந்தையில்!*

*பெண்களின் பொருளாதார சுதந்திரத்தை - மீண்டும்*
*முடமாக்கும் இந்த அரசமைப்பை*
*ஏற்க, எந்த நியாயமும் இல்லை! ஆம்*
*செயலற்ற அரசை அசைத்திடும் போரில் - நீயும்*
*இணைந்து கொள் என் தோழியே!*

**- எஸ்.தமிழ்ச்செல்வி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

## கஜா புயலுக்கு அரசு ஊழியர்களின் ஒரு நாள் ஊதியத்தை வழங்கும் வகையில் அரசாணை வெளியிடக் கோருதல் தொடர்பாக

கடித எண்.31/2018 நாள் : 23-11-2018

பெறுநர்

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை 600009.

அய்யா, வணக்கம்.

பொருள் : தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் - தமிழகத்தை தாக்கிய கஜா புயல் வெள்ளத்தால் துவண்டு போயிருக்கும் மக்களுக்கு மனித நேயத்தோடு உதவிட அரச ஊழியர்களின் ஒரு நாள் ஊதியத்தை அவர்தம் ஊதியத்திலிருந்து வழங்கிடும் வகையில் அரசாணை வெளியிட வேண்டுமென- கோருதல் தொடர்பாக

ஆழிப் பெருங்கடலில் உருவான ஊழிக் காற்று தமிழகத்தின் எட்டு மாவட்டங்களில் கோரத்தாண்டவம் ஆடிச் சென்றிருக்கிறது. இன்றுவரை இயல்பு நிலை திரும்பவில்லை என்ற செய்தி எத்தனை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தும் என்ன பயன் என்று கேட்கத் வைத்திருக்கிறது. ஐந்து நாட்களுக்கு மேலாகியும் மக்கள் தண்ணீருக்கும் உணவுக்கும் அலைகின்ற அவலம் கஜா புயலின் உக்கிரத்தை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

கற்களும், மூங்கில் கழிகளும் மட்டுமே எஞ்சிய வீடுகளும், கூரைகள் சாய்ந்து உயிரிழந்த மாடுகளும், வேரோடு சாய்ந்த மரங்களில் பறவைகளோடு நசுங்கிய கூடுகளும், புயலில் சிக்கி மரணமடைந்த மனிதர்களும் எத்தனை பெரிய அஞ்சாநெஞ்சனையும் நிலைகுலையச் செய்துவிடும் காட்சிகளாகும். விளைச்சல் செய்த பயிர்கள் நீரில் மூழ்கியிருக்கும் நிலையும், நெடிதுயர்ந்த தென்னையும், முந்திரி, வாழை மற்றும் மா மரங்கள் வேரோடு பிடுங்கி வீசப்பட்டிருக்கும் காட்சிகளும், காண்போர் உள்ளங்களை கதற வைக்கும் நிகழ்வுகளாகும். இவை பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்களை அன்றாடங்களை முடக்கிப் போட்டிருக்கிறது.

தனித்தனி தீவுகளாய் மாறிவிட்ட குக்கிராமங்களில் இருந்து தண்ணீர் வேண்டும், உணவு வேண்டும், மெழுகுவர்த்தி, தீப்பெட்டிகள் வேண்டும் என்ற கூக்குரல்கள் கேட்டுக்கொண்டே இருக்கின்றன. கரையிலோ அரசியல் கட்சிகள் அனைத்தும் வழிந்தோடும் கண்ணீரைத் துடைக்க வழிதேடாமல், ஒருவருக்கொருவர் வசை போர் அரசியல் நடத்தி சுய ஆதாயம் தேடுவதிலேயே ஆளாய்ப் பறக்கிறார்கள்.

எப்போதும் போல் சமூக சேவகர்களும், தன்னார்வ சேவை அமைப்புகளும் முன்னணியில் களத்தில் இறங்கி எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் தங்களால் இயன்ற அளவுக்கு மக்களின் பசி போக்கியும், உடை கொடுத்தும், மெழுகுவர்த்தி தீப்பெட்டி மண்ணெண்னை படுக்கைவிரிப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களை அளித்தும் மனித நேயம் உள்ளது என்பதை மறுபடியும் மறுபடியும் நிரூபித்து வருகிறார்கள்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், விவசாயிகள் போராட்டம் நடத்திய போது அவர்களுக்கு ஆதரவாக நின்று போராடிய இயக்கமாகும். இந்த போராட்டங்களின் போது விவசாய சங்கங்களை சேர்ந்த தோழர்கள், இறந்துபோன விவசாயிகளின்

வாரிசுகள் கல்விக் கட்டணம் செலுத்த முடியாததால் பள்ளிக்குச் செல்ல முடியாமல் உள்ளதாக தெரிவித்தனர். கடன் தொல்லையால் இறந்துபோன விவசாயிகளின் குழந்தைகள் கல்வி கற்பதற்கு கஷ்டப்படக்கூடாது என்பதுடன், அவர்களின் எதிர்காலம் பாடப்புத்தகங்களில் புதைந்து கிடப்பதால் அவர்களுக்கு உதவுவது சங்கத்தின் தலையாய கடமை என்று முடிவு செய்து அதற்கான நிதி உதவியை திரட்ட அனைத்து மாவட்டங்களுக்கும் தெரிவித்து, இறந்துபோன விவசாயிகளின் குழந்தைகள் மட்டுமல்லாமல், கடன்தொல்லையால் அவதிப்படும் விவசாயிகளின் குழந்தைகளும் தடையின்றி கல்விபயில முட்டுக்கட்டையாக இருக்கும் பொருளாதாரத் தடையை நீக்குவதென தீர்மானித்து உண்டியல் மூலம் நிதி சேகரித்து வழங்கியுள்ளோம்.

அதுபோலவே இன்று கடும் பாதிப்படைந்த நான்கு மாவட்ட மக்களுக்கும் முதல் தேவை ஆறுதலான வார்த்தைகளும் அன்றாடத் தேவைகளுக்கான அடிப்படை பொருட்களுமே. அவர்கள் அரசிடமிருந்து எதிர்பார்ப்பது பணத்தை அல்ல. உணவு, உடை, இருப்பிடம் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களைத்தான். இவர்கள் முதலில் எழுந்து நிற்க நாம் அனைவரும் கைகொடுக்க வேண்டியது அவசியமாகும். கேரள மாநிலத்தில் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்ட போதே அரசு ஊழியர்கள் அண்டைமாநிலம் என்றுகூட பாராமல் மனித நேயத்தோடு உதவிக்கரம் நீட்டி ஒரு பெருந்தொகையை நிவாரணமாக அம்மாநில முதல்வரிடம் வழங்கினோம்.

மேலும் ஒரு நாள் ஊதியத்தை வழங்கிடவும் முடிவெடுத்து வழங்கியுள்ளோம் என்பதினை தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டுவருவதுடன், அது போன்றே தமிழகத்தை தாக்கிய கஜா புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு துவண்டு போயிருக்கும் மக்களுக்கு தமிழக அரசு ஊழியர்கள் ஒரு நாள் ஊதியத்தை அவர்தம் ஊதியத்திலிருந்து வழங்கிடும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசாணை வெளியிட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்மதிப்புடன்

தங்கள் நம்பிக்கையுள்ள,

**(மு. சுப்பிரமணியன்)**
மாநிலத் தலைவர்

**(மு. அன்பரசு)**
பொதுச்செயலாளர்

## வாசகர் கடிதம்

நவம்பர் மாத இதழ் படித்தேன். சேலத்தில் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு மிக எழுச்சியான வேலை நிறத்த ஆயத்த மாநாட்டின் எழுச்சியை பறைசாற்றியது. வரலாறு சொல்லும் மாற்றம் விரைவில் தலையங்கம் படித்தேன் சிறப்பாக இருந்தது. நாடு தழுவிய ஜனவரி 8, 9 வேலை நிறுத்தம் தொடர்பான கருத்தரங்கம் என்ற பொதுச் செயலாளர் மேசையிலிருந்து, கேலிக் கூத்தாகும் தனி மனித ரகசியம், பெரணமல்லூர் சேகரனின் சம காலத்தில் பெரியார் அம்பேத்கர், விடுதலைப் போரில் பெண்கள் பங்கு, பன்னாட்டு கம்பெனிகளும் தமிழக அரசின் நிலைபாடும், டெல்லி பேரணியில் தென் சென்னை மகளிர் பங்கேற்பு போன்ற அனைத்து கட்டுரைகளும் சிறப்பாக இருந்தன.

**ரா.தட்சிணாமூர்த்தி,** கடலூர்

அட்டை படங்கள் நமது போராட்ட ஆர்ப்பரிப்புகளை காட்டியது. போராட்டமே வரலாறு! நெடுகிலும் மாற்றமே!, மக்களால் தேர்ந்தெடுத்து கார்பரேட்டுகளுக்கு சேவை செய்யும் அரசுகளை என்ன சொல்வது,

தோழர்கள் தமிழ்ச்செல்வி மற்றும் சேகரன் அவர்களின் காலத்திற்கேற்ப நினைவூட்ட தகுந்த கட்டுரைகள் அருமை. முதலில் மாற்றம் நம் அரசு ஊழியர்கள் ஒரு விரல் நுனியில்தான் உள்ளது 2019 ல் எதிர்ப்பார்போம் அதுவரை ஊழியர்களின் விரோதபோக்கான அரசை எதிர்ப்போம்.

- **சி. பாலசுப்ரமணியன்**, நாகப்பட்டினம்.

தோழர் பெரணமல்லூர் சேகரன் எழுதிய சம காலத்தில் பெரியாரும் அம்பேத்கரும் கட்டுரை இளம் தோழர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. நமது இதழில் இது போன்ற நமது சங்கத்தின் இயக்கங்கள் போராட்டங்கள் அதன் வாயிலாக கிடைத்த பயன்கள் குறித்த கட்டுரைகள் வெளியிட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

- முனைவர் **கா.பால் பாண்டி**, திருச்சி.

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு அரசு மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவனத் தொழிலாளர் சங்கம்

சங்கத்தின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் 17.11.2018 அன்று சென்னை, திருவல்லிக் கேணியில் உள்ள தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லத்தில் மாநிலத் தலைவர் எம்.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் ஆர்.பாலசுப்ரமணியன் நடைபெற்ற வேலைகள் தொடர்பான அறிக்கை சமர்ப்பித்தார். மாநில பொருளாளர் கே.புகழேந்தி சங்க நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தார். அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் என்.குமாரவேல் பங்கேற்று பல ஆலோசனை வழங்கினார். ஜாக்டோ-ஜியோ சார்பில் 4.12.2018 முதல் நடைபெறவுள்ள காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் முழுமையாக பங்கேற்பது என அறைகூவல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் காலிப் பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. மாநிலச் செயலாளர் கே.மதிவாணன் நன்றி கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. இதில் ஆட்சி அலுவலர் பதவி உயர்வு பட்டியல் வெளியிடுவதில் உள்ள நீதிமன்ற தடை யாணையை விலக்கிக் கொள்ள நீதிமன்றத்தை நாடுவது எனவும், இதற்காக ஒவ்வொரு மாவட்டங்களும் ரூ.5000 மாநில மையத்தில் ஒப்படைப்பது எனவும், நிலுவை கோரிக்கை களை வலியுறுத்தி 28.2.2019 முதல் அனைத்து மாவட்டங்களிலும் காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபடுவது எனவும், ஜாக்டோ-ஜியோவின் அனைத்து போராட்டங்களிலும் முழுமையாக பங்கேற்பது எனவும், கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நிவாரண உதவிகள் சேகரித்து அனுப்புவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

## தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுனர் சங்கம்

மாநிலக்குழு முடிவின்படி, நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில் 15.11.18 அன்று நாகை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையிலும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாகையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணைத் தலைவர் எம்.ஜூலைக்கா தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் ஜெ.செல்வராஜ் விளக்கவுரையாற்றினார். மருந்தாளுனர் சங்க நிர்வாகிகள் ஆர்.பாஸ்கரன், எஸ்.பார்வதிதேவி, எஸ்.சக்திவேல், எம்.செல்வராஜ், ஆர்.பாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். புள்ளியில் சார்நிலை அலுவலர் சங்க பொதுச்செயலாளர் ப.அந்துவன் சேரல், வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் து.இளவரசன், அரசு ஊழியர் சங்க நாகை வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், அரசு செவிலியர் சங்கத் தலைவர் ப.ஜீவானந்தம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன் நிறைவுரை யாற்றினார். இறுதியில் மாவட்டப் பொருளாளர் என்.ஜி.பாஸ்கரன் நன்றியுரையாற்றினார்.

## தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்கம்

சங்கத்தின் ஆறாவது மாநில மாநாட்டை நாகப்பட்டினத்தில் நடத்துவது என்ற மாநில மைய முடிவின்படி 03.11.18 மாலை நாகப்பட்டினம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் மாவட்டத் தலைவர் எஸ்.கணேசன் தலைமையில் மாநில மாநாடு வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் வி.உதயகுமார் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச்



செயலாளரும், மாநில தணிக்கையாளருமான ஏ.ட்டீ.அன்பழகன் தலைமையில் வரவேற்புக்குழு தேர்வு செய்யப்பட்டது.

மாநிலத் தலைவர் ஆ.அம்சராஜ், மாநில பொதுச் செயலாளர் மா.பாலசுப்பிரமணியன், மாநிலச் செயலாளர்கள் வே.கணேசன், த.கிளாட்வின், மாநில துணைத்தலைவர்கள் ப.கோதண்டபாணி, து.சிங்கராயன், மகாலிங்கம் (திருவாரூர்), தம்பி அய்யா (தஞ்சாவூர்), இளங்கோவன் (திருச்சி), சிவகுமார் (அரியலூர்), சுப்பிரமணி (பெரம்பலூர்), கிருஷ்ணமூர்த்தி (புதுக்கோட்டை) ஆகிய மாவட்டங்களின் நிர்வாகிகளும், புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநில பொதுச்செயலாளர் ப.அந்துவன் சேரல், கிராம சுகாதார செவிலியர் சங்க மாநிலச் செயலாளர் பா.ராணி, வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் து.இளவரசன், வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் எம்.மேகநாதன், மத்திய அரசு ஓய்வூதியர் சங்கத் தலைவர் சு.மணி, ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்கத் தலைவர் வி.பாலசுப்பிரமணியன், நாகை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

வரவேற்புக்குழு தலைவர் ஏ.ட்டீ.அன்பழகன் "எதிர்வரும் டிசம்பர் 7.&.8 ஆகிய இருநாட்கள் நாகையில் மாநில மாநாட்டை நடத்துவது மற்றும் 08.12.18 அன்று ஆயிரக்கணக்கான சாலைப்பணியாளர் பங்கேற்கும் பேரணியையும் பொது மாநாட்டையும் சிறப்பாக நடத்த அனைத்துத்துறை சங்க தோழர்களும் ஒத்துழைக்க வேண்டும்" என குறிப்பிட்டார். அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் எம்.சௌந்தரராஜன் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் கே.ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

## சத்துணவு ஊழியர் சங்கம்

சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும், போராடும் சத்துணவு ஊழியர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் தருமபுரி மாவட்டம் முழுவதும் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சத்துணவு ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். ஓய்வு பெறும் சத்துணவு ஊழியர்களுக்கு குடும்ப பாதுகாப்பான ஓய்வூதியம் ரூ. 9000 வழங்க வேண்டும். ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு ஒட்டு மொத்தத் தொகையான அரசு ஊழியர்களுக்கு வழங்குவதை போல ரூ 5 லட்சம் வழங்க வேண்டும். உள்ளிட்ட 5, அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சத்துணவு ஊழியர் சங்கம் தொடர்போராட்டம் நடத்திவருகிறது இவர்களின் கோரிக்கைகளை தமிழக அரசு உடனே நிறைவேற்ற வலியுறுத்தி அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தருமபுரியில் சுமதி தலைமை வகித்தார். ஊரக வளர்ச்சி துறை அலுவலர் சங்க வட்டத் தலைவர் ஆணந்த விஜயராகவன் மற்றும் ராமன் ஆகியோர் பேசினர். பாலக்கோட்டில் உஷா தலைமை வகித்தார் மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், வட்டத் தலைவர் கே.சாக்ரடீஸ், பென்னாகரத்தில் வட்டத் தலைவர் திம்மராயன் தலைமை வகித்தார் வட்டச் செயலாளர் பெருமாள், பேசினார். அரூரில் வட்டத் தலைவர் சாமிநாதன் தலைமை வகித்தார். வட்டச் செயலாளர் அழகிரி பேசினார். நல்லம்பள்ளியில் வட்டத் தலைவர் பிரபாகரன் தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் எம்.யோகராசு பேசினார். பாப்பிரெட்டிபட்டியில் தலைவர் சண்முகம் தலைமை வகித்தார். வட்டச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

**இரத்ததானம் செய்வோம் உயிர்களை காப்போம்!**

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com